



விலை ரூபா 40

பக்கங்கள் - 12

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

ஆண்டு: 01 இதழ் : 56 குரோதி வருடம் மார்கழி மாதம்

11 ஆம் திகதி வியாழக்கிழமை ஹிஜ்ரி 1446 ஜமாதுல் ஆகிரா 24 (26.12.2024)










மனிதத்தை உலகிற்கு வெளிப்படுத்திய இயேசு பிரானின் அவதாரத்தினை சிறப்பிக்கும் கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு (24) நள்ளிரவு மன்னார் மாவட்டத்தின் முதல் பேராலயமான மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் அருட்தந்தையர்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப் பலியாக ஒப்புக் கொடுத்தனர்.

(படங்கள்– எஸ்.ஆர்.லெம்பேட்)

# சுனாமி: 20 ஆண்டுகள் மாறாத மன வடு கரையோரங்களில் இன்று நினைவேந்தல்

## 9.25 முதல் 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்துங்கள்



(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

நாட்டின் கரையோரங்களை கண்ணிமைக்கும் நேரத்தில் புரட்டிப் போட்டு பேரழிவை ஏற்படுத்திய சுனாமி– கடற் பேரலைத் தாக்கம் இடம்பெற்று இன்றுடன் 20 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

இன்றைய தினம், காலி மாவட்டம் முதல் யாழ்ப்பாணம் மாவட்டம் பருத்தித்துறை வரை உள்ள கரை யோரப்பிரதேசங்களில் சோக தினமாக அனுஷ்டிக்கப்படுவதோடு, நினைவேந்தல் நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தென்கிழக்காசிய நாடுகளின் கரையோரங்களைப் புரட்டிப் போட்ட சுனாமியால் காவு கொள்ளப்பட்டவர்களின் உறவுகள், இன்று சோகத்தைச் சுமந்து துயரத்தை நினைந்தழுது ஆறுதலடை கிறார்கள். "ஆளாற்றாத் துயரெல்லாம் நாளாற்றும்" (தொடர்ச்சி...)

02

## போக்குவரத்து விதிமீறல்:

# 8,747 சாரதிகளுக்கு சட்ட நடவடிக்கை



மதுபோதையில் வாகனம் செலுத்திய 251 நபர்கள் உட்பட போக்குவரத்து சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் மொத்தம் 8,747 வாகன சாரதிகளுக்கு எதிராக நேற்று புதன்கிழமை அதிகாலை 6 மணி வரையான 24 மணித்தியாலங்களில் சட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் அறிவுறுத்தலுக்கு இணங்க வீதி விபத்துக்களை குறைக்கும் நோக்கில் நாடளாவிய ரீதியில் விசேட போக்குவரத்து நடவடிக்கை பண்டிகைக் காலத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

நாட்டின் போக்குவரத்துச் சட்டத்தை நடைமுறைப்படுத்தவும், வீதி விபத்துகளை தவிர்க்கவும், (தொடர்ச்சி...)

02

## உள்நாட்டு உற்பத்தியில் ஆதிக்கம் செலுத்தும் மேல் மாகாணம்

2023ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மிகப் பெரிய பங்களிப்பு மேல் மாகாணத்திலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. 27,630 பில்லியன் ரூபா பங்களிப்பு மேல் மாகாணத்தில் இருந்து பெறப்பட்டதாகவும், இது மொத்த உள்நாட்டு உற்பத்தில் (தொடர்ச்சி.)

02

## சிறைக்கைதிகள் பொது மன்னிப்பில் விடுதலை

( கி.வசந்தன் )

நத்தார் பண்டிகையை முன்னிட்டு வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து 8 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் சிறு குற்றங்களுக்காக தண்டனை பெற்றிருந்த 389 பேர் நாடளாவிய ரீதியில் உள்ள சிறைகளில் (தொடர்ச்சி.)

02

## பாதுகாப்பு குறைப்பு; நீதிமன்றம் செல்ல மஹிந்த முஸ்தீபு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு நீக்கப்பட்டது தொடர்பில் நீதிமன்றத்திற்கு செல்வதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய செயற்குழு உறுப்பினர் சட்டத்தரணி ரவீந்திர (தொடர்ச்சி...)

02

## அஸ்வெசும கொடுப்பனவு; திருத்தம் செய்யப்பட்ட வர்த்தமானி வெளியீடு

(கனுஷியா புஷ்பகுமார்)

திருத்தம் செய்யப்பட்ட அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. வறியவர்கள் மற்றும் மிகவும் வறியவர்கள் சமூகப் பிரிவினருக்கு தற்போது வழங்கப்படுகின்ற மாதாந்த நலன்புரிக் கொடுப்பனவுத் தொகை முறையாக 8,500 (தொடர்ச்சி...)

02

## 67 பேருடன் பயணித்த விமானம் விபத்து; உயிர் தப்பிய 32 பயணிகள்!



கஸகஸ்தானின் அக்டாவ் நகரில் 67 பேருடன் பயணித்த அசர்பைஜான் விமானம் நேற்று புதன்கிழமை (25) விபத்துக்குள்ளானதில் குறைந்தது 32 பேர் உயிர் பிழைத்துள்ளதாக தெரிவித்துள்ள அதிகாரிகள்

விபத்தில் 30 க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருக்கலாம் என்றும் (தொடர்ச்சி...)

02

## பிரிக்ஸ் கூட்டமைப்பில் இணைய 09 நாடுகளுக்கு வாய்ப்பு

### - இலங்கைக்கு கிடைக்கவில்லை



(சுப்ரமணியம் நிஷாந்தன்)

மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, பெலாரஸ், பொலிவியா, கியூபா, உகாண்டா, கசகஸ்தான், உஸ்பெகிஸ்தான் உள்ளிட்ட ஒன்பது நாடுகள் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் பிரிக்ஸ் கூட்டமைப்பில் இணைத்துக்கொள்ளப்பட உள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை ரஷ்யாவின் கசான் நகரில் நடைபெற்ற மாநாட்டில் பிரிக்ஸ் (தொடர்ச்சி...)

02

## திருக்கோவில் கடலில் மூழ்கி மூவர் மாயம்

(வி.சுகிர்தகுமார்)

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் தாண் டியடி உமிரி பகுதியில்,நேற்று (25) கடலில் மூழ்கி மூவர் காணாமல் போயுள்ளனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தையும் இரு பிள்ளை களும் கடலில் மூழ்கிக் காணாமல் போயுள்ளதாக (தொடர்ச்சி...)

02

## பண்டிகைக் காலத்தில் அதிகரித்துள்ள இணையவழி பண மோசடி



பண்டிகைக் காலங்களில் இணையம் ஊடாக மேற்கொள்ளப்படும் பண மோசடிச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக இலங்கை கணினி அவசர செயற்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. சில பரிசுகளை வென்றதாக கூறி வாடிக்கையாளர்களுக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்து பண மோசடி செய்யப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அதன் பிரதம (தொடர்ச்சி...)

02

## அநுர அரசின் நியமனங்கள் தற்காலிகமானவை?

### ரூபவாஹினிக்கு புதிய தலைவர் நியமனம்



(கனுஷியா புஷ்பகுமார்)

ரூபவாஹினி தொலைக்காட்சியின் தலைவர் பதவியில் இருந்து செனேஷ் திஸாநாயக்க பண்டார இராஜினாமா செய்துள்ளதை சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளி ந்த ஜயதிஸ்ஸ பிபிசி (தொடர்ச்சி...)

02

## கல்விப் பல்கலை வளாகமாக மாறும் கல்வியியல் கல்லூரிகள்

( முகம்மட் முக்தார் )

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து தேசிய கல்வியியல் கல்விக் கல்லூரிகளும் புதிதாக உருவாக்கப்படவுள்ள இலங்கை கல்வி பல்கலைக் கழகத்தின் (Sri Lanka university of Education) வளாகங்களாக மாற்றம் பெறவுள்ளன.

பாரம்பரிய பல்கலைக்கழக முறைமையிலிருந்து வேறுபட்டதொரு பல்கலைக்கழக முறைமைக்குள் இப்பல்கலைக்கழகமும் வளாகங்களும் இயங்கவுள்ளன.

தற்போது நாடுதழுவிய ரீதியில் வடக்கு,கிழக்கு,மலையகம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக 20 தேசிய கல்விக்கல்லூரிகள் இயங்கி வருகின்றன. (தொடர்ச்சி...)

02

## போதைப்பொருள் குற்றச்சாட்டில் சிறையிலிடப்படுவோர் அதிகரிப்பு

(கனுஷியா புஷ்பகுமார்)

போதைப்பொருள் தொடர்பான குற்றங்களால் சிறையில் அடைக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் சிறைச்சாலைகளில் அசாதாரண நெரிசல் ஏற்பட்டுள்ளதாக தேசிய தணிக்கை அலுவலகம் வெளியிட்டுள்ள கணக்காய்வு அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது.

2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி வரையில், நீர்கொழும்பு சிறைச்சாலையில் உள்ள மொத்த 2225 கைதிகளில் 1442 பேர் போதைப்பொருள் குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர், இது 65 வீதமாகும். (தொடர்ச்சி...)

02

## பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் சீயோன் தேவாலயத்தில் ஆராதனை



(க.சரவணன்)

மட்டக்களப்பில் உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டு தாக்குதலுக்கு உள்ளான சீயோன் தேவாலயத்தில் நேற்று

02

## 67 பேருடன்...

அஞ்சப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

கஸகஸ்தானின் அமைச்சகம் தனது டெலிகிராம் அறிக்கையில்,விமானத்தில் பயணத்தவர்களில் 05 பணியாளர்கள் இருந்ததாகவும், விபத்தில் உயிர் தப்பிய குறைந்தது 29 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் ரஷ்யாவின் அரசு செய்தி நிறுவனமான தெரிவித்துள்ளது.

சம்பவ இடத்திலிருந்து அவசரகால பணியாளர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களை மேற்கொள்காட்டி செய்தி வெளியிட்டுள்ள ரஷ்ய ஊடக நிறுவனமான Interfax, முதற்கட்ட மதிப்பிட்டின் படி நான்கு உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், இரு விமானிகளும் விபத்தில் இறந்துவிட்டதாகவும் கூறியது. அசர்பைஜான் ஏர்லைன்ஸ் ஜே2-8243 என்ற விமானம், அசர்பைஜான் தலைநகர் பாகுவிலிருந்து ரஷ்ய பிராந்தியமான செச்சினியாவில் உள்ள க்ரோஸ்னிக்கு பறந்து கொண்டிருந்தது. இதன்போது, கஸகஸ்தானின் அக்டோவிலிருந்து சுமார் 3 கிலோமீட்டர் தொலைவில் அவசரமாக தரையிறக்க முற்பட்ட வேளையில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தினை அடுத்து ஏற்பட்ட தீயை கட்டுப்படுத்தும் முயற்சியில் மீட்புப் பிரிவினர் ஈடுபட்டனர். கஸகஸ்தானின் அவசரகால அமைச்சகம் முதலில் விபத்தில் 25 பேர் உயிர் பிழைத்ததாகக் கூறியது, பின்னர் அந்த எண்ணிக்கையை பின்னர் 29 ஆக மாற்றியமைத்தது.பின்னர் விபத்தில் இருந்து குறைந்தது 32 பேர் உயிர் பிழைத்ததாக அசர்பைஜானில் உள்ள சட்டாம அதிபர் அலுவலகம் தெரிவித்தது.

எவ்வாறெனினும், விபத்தினால் எத்தனை பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறித்து தெளிவாக கூறப்படவில்லை.

அசர்பைஜான் ஏர்லைன்ஸ் தகவலின்படி, 37 பயணிகள் அசர்பைஜான் குடிமக்கள், 16 ரஷ்ய பிரஜைகள், 06 கஸகஸ்தானியர்கள் மற்றும் 03 கிர்கிஸ்தானிய பிரஜைகளும் விமானத்தில் பயணித்ததாக கூறப்படுகிறது.

## பிரிக்ஸ்....

கூட்டமைப்பில் சேர இலங்கை உட்பட 35 நாடுகள் விண்ணப்பித்திருந்தன.

பிரிக்ஸ் அமைப்பில் சேர தமது விருப்பத்தை வெளிப்படுத்திய கடிதமொன்றை இலங்கை வெளிவிவகார அமைச்சு ரஷ்யா ஜனாதிபதி விளாடிமீர் புடினுக்கும் அனுப்பியிருந்தது.

என்றாலும், விண்ணப்பித்த 35 நாடுகளில் 9 நாடுகளை மாத்திரமே இணைத்துக்கொள்ள கூட்டமைப்புக்கு தலைமை தாங்கும் ரஷ்யா நடவடிக்கை எடுத்துள்ளது.

“மாநாட்டின் நோக்கம் பிரிக்ஸ் கூட்டமைப்பை விரிவடையச் செய்வதாகும். அது தற்போது வெற்றிகரமாக நடந்துள்ளது. இணைக்கப்படும் புதிய நாடுகளுக்கு ஒப்பந்தங்கள் அனுப்பட்டுள்ளன.” என ரஷ்ய அதிகாரி யூரி உஷகோவ் தெரிவித்துள்ளனர்.

மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, பெலாரஸ், பொலிவியா, கியூபா, உகாண்டா, கசகஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் கூட்டமைப்பில் சேர இணக்கம் தெரிவித்துள்ளன. அதனையடுத்து, வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் இந்த நாடுகள் கூட்டமைப்பில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் பிரிக்ஸ் கூட்டமைப்பில் சேர மேலும் நான்கு நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. விரைவில் அவர்களும் அமைப்பில் இணைவார்கள் என்றும் யூரி உஷகோவ் கூறியுள்ளார். 20 இற்கும் மேற்பட்ட நாடுகள் பிரிக்ஸ் அமைப்புடன் இணைந்து செயல்பட விருப்பம் தெரிவித்துள்ளன. ஒரே மாதிரியான சிந்தனைகள் கொண்ட நாடுகள் ஒன்றாக செயல்படுவது சிறப்பு எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இலங்கையின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளதாக கசான் மாநாட்டுக்குப் பின்னர் சமூக வலைதளங்களில் செய்தி வெளியான போது அதனை இலங்கைக்கான ரஷ்ய தூதரகரம் நிராகரித்திருந்த போதிலும் புதிதாக இணைக்கப்பட உள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

## போக்குவரத்து...

சாரதிகளை வீதி ஒழுங்கை பின்பற்ற செய்யவும் இந்த விசேட போக்குவரத்து ஒழுங்குப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க நேற்று புதன்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டதுடன், நேற்று அதிகாலை வரையான 24 மணித்தியாலங்களில் நாட்டில் எவ்வித உயிரிழப்புகளும் வீதி விபத்தில் இடம்பெறவில்லை என்றும் கூறியுள்ளார். பாதுகாப்பாக வாகனத்தை செலுத்தல், மது அருந்துவதை தவிர்த்தல் மற்றும் போக்குவரத்து சட்டங்களை கடைபிடித்து உயிர்களை பாதுகாக்குமாறும் பொலிஸார் சாரதிகளை கேட்டுக்கொண்டுள்ளனர்.

## பலத்த...

புதன்கிழமை (25) இராணுவ பாதுகாப்புடன் ஆராதனைகள் இடம்பெற்றன. நாடளாவிய ரீதியில் நத்தார் பண்டிகையை முன்னிட்டு தேவாலயங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.இந்த நிலையில் மட்டக்களப்பில் கடந்த 2019 ம் ஆண்டு ஏப்ரல் 21 ம் திகதி உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டு தாக்குதலையடுத்து குறித்த தேவாலயம் மென்ரசா வீதியில் நிர்மாணிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இந்த தேவாலயத்தில் நேற்று காலை இடம்பெற்ற நத்தார் விசேட ஆராதனைகளுக்காக விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அதேவேளை, மாவட்டத்திலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு செவ்வாய்க் கிழமை (24) இரவு தொடக்கம் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டனர்.

## பண்டிகை...

தகவல் பாதுகாப்பு அதிகாரி நிரோஷ் ஆனந்த தெரிவித்தார். AI தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி சில மோசடிகள் இடம்பெறுவதாக முறைப்பாடுகள் பதிவாகியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். இவ்வாறான அழைப்புகள் மற்றும் சம்பவ ங்களில் இருந்து தம்மை பாதுகாத்துக்கொள்வதற்கு பொதுமக்கள் விசேட கவனம் செலுத்த வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## சிறைக்கைதிகள்...

இருந்து நத்தார் பண்டிகையை முன்னிட்டு விடுதலை செய்யப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்திருந்தது. அந்தவகையில் வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் சிறுகுற்றங்களுக்காக தடுத்துவைக்கப்பட்டிருந்த 8 பேர் விடுவிக்கப்பட்டனர்.வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையின் பொறுப்பதிகாரி புத்திக பெரெரா தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இதேவேளை நத்தார் பண்டிகையை முன்னிட்டு நேற்று (25)மட்டக்களப்பு சிறையிலிருந்து 12 சிறைக்கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

சிறிய குற்றங்களுக்காகவும், வேறு காரணங்களுக்காகவும் தண்டனை பெற்றவர்களுக்கு நத்தார் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதியினால் வழங்கப்படுகின்ற பொது மன்னிப்பின் அடிப்படையில் இந்த பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு மட்டக்களப்பு சிறைச்சாலையின் அத்தியட்சகர் நல்லையா பிரபாகரன் தலைமையில் இடம்பெற்றுள்ளதுடன், இதன்போது சிறைச்சாலையின் பிரதம ஜெயிலர் உள்ளிட்ட சிறைச்சாலை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்

## அஸ்வசும...

ரூபாவை 10,000 ரூபா வரை அதிரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மிகவும் வறியவர்கள் என்ற பிரிவின் கீழ் வழங்கப்பட்ட 15,000 ரூபாய், 17,500 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. நலன்புரிப் பலன்களைப் பெறும் மாற்றுத்திறனாளிகள், பாதிக்கப் படக்கூடிய மற்றும் மிகவும் ஏழ்மையான குடும்பங்களுக்கான சமூகப் பிரிவுகளில், 480,000 குடும்பங்களுக்கு மாதாந்த நலன்புரி உதவித்தொகை 5,000 மற்றும் 17,000 ரூபா வழங்கப்படும்.960,000 வறிய குடும்ப ங்களுக்கு 10,000 ரூபா நலன்பரி கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. இது இடைநிலை மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கான இழப்பீடு காலத்தை 31.03.2025 வரை நீடித்துள்ளது. அதற்கமைய, 2024ஆம் ஆண்டின் மே மாதம் 17ஆம் திகதி வெளியிடப்பட்ட அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு முறைமை இரத்துச் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், ஏற்கனவே பலன்களை பெற்று, பல்வேறு காரணங்களால் பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்படும் பயனாளிகளுக்கும், மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்து தற்போது பரிசீலனைக்கு உள்ளான விண்ணப்பதாரர்களுக்கும், அவர்களின் தகைமையின் அடிப்படையில் இம்மாதம் 31ஆம் திகதி வரையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கல்வி பல்கலை...

1985 ம் ஆண்டின் கல்வி அறிக்கையின் அடிப்படையில் 1989 ம் ஆண்டு முதல் 20 தேசிய கல்விக்கல்லூரிகள் நாடளாவிய ரீதியில் இயங்கிவருகின்றன. 20 வது தேசிய கல்விக்கல்லூரியாக குளியாப்பிட்டி தொழில் நுட்ப கல்விக்கல்லூரி அண்மையில் உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போது நாடளாவிய ரீதியில் உள்ள 08 ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளும் மேற்படி பல்கலைக்கழக வளாகங்களின் கற்றல் நிலையங்களாக மாற்றப்படும்.

பிரதான கல்வி பல்கலைக்கழமாக தற்போதைய மகரகம தேசிய கல்வியியல் கல்லூரி செயற்படும்.

இப்பிரதான பல்கலைக்கழகம் ஊடாகவே கல்விமானி பட்டம் வழங்கப்படும். வடக்கில் யாழ்ப்பாணம், வவுனியா, கிழக்கில் மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை, மலையகத்தில் தலவாக்கலை, மேல்மாகாணத்தில் அழுத்கம ஆகிய பிரதேசங்களில் தமிழ் மொழி மூல தேசிய கல்வியியல் கல்லூரிகள் இயங்கி வருகின்றன.

இதேபோல்,வடக்கில் கோப்பாய், கிழக்கில் மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை, மலையகத்தில் கொட்டகல ஆகிய இடங்களில் ஆசிரிய கலாசாலைகளும் இயங்கி வருகின்றன.

உத்தேச இலங்கை கல்வி பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட பின் கல்வியியல் கல்லூரி டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படமாட்டாது. தற்போது தேசிய கல்வி நிறுவகத்தினால் நடாத்தப்படும் கல்வி மானி பட்டப்படிப்புகள் யாவும் உத்தேச இலங்கை கல்வி பல்கலைக் கழகத்தின் தொடருறு கல்வி நிலையங்களாக மாற்றம்பெறும்.

இதனடிப்படையில் உத்தேச கல்வி பல்கலையின் கீழ் 20 வளாகங்களும் 08 கற்கை நிலையங்கள் மற்றும் தேசிய கல்விநிறுவன பிராந்திய கற்கை நிலையங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

இக்கல்வி பல்கலைக் கழகத்தில் பட்டமேற்படிப்புகளும், முதுமானி கற்கை நெறிகளும் ஆரம்பிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## போதைப்பொருள்...

அதே ஆண்டு செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி வரையில் களுத்துறை சிறைச்சாலையில் உள்ள மொத்த 1275 கைதிகளில் 885 பேர் போதைப்பொருள் குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ளதுடன், அது 69 வீதம் என தேசிய கணக்காய்வு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, சிறைச்சாலைகள் திணைக்களமானது,2023ஆம் ஆண்டில் ஊழியர் சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக மேலதிக நேர மற்றும் விடுமுறை கொடுப்பனவுகளுக்காக மாத்திரம் 9820 இலட்சம் ரூபாயை செலவழித்துள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த தொகையானது 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 1060 இலட்சம் ரூபாய் அதிகரிப்பு என கணக்காய்வு அறிக்கை கூறுகின்றது.

2023ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் உள்ள கைதிகளை சிறைச்சாலை அதிகாரிகளின் வீட்டு வளாகத்தில் பணிக்கமர்த்துவதற்காக மட்டுமே சிறைச்சாலை அதிகாரிகள் 234 மனித நாட்களை செலவிட்டுள்ளதாக கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2023ஆம் ஆண்டில், சிறை அதிகாரிகளின் வீட்டு வளாகங்களில் கைதிகள் பணிக்கமர்த்தப்பட்டதாக 233 வழக்குகள் பதிவாகியுள்ளதுடன் சிறைச்சாலை தலைமையகத்தின் 09 வாகனங்கள் கைதிகளை ஏற்றிச் செல்வதற்காக 62 சந்தர்ப்பங்களில் 372 கிலோமீட்டர் தூரம் ஓட்டிச் சென்றுள்ளதாக கணக்காய்வு அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம், இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான நடவடிக்கைகள் தொடர்பான கணக்காய்வு நிதிநிலை அறிக்கையில் தேசிய கணக்காய்வு தலைமைச் செயலகம் இதனைத் தெரிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27ஆம் திகதி 01ஃ2023 திறைசேரி சுற்றறிக்கை மேலதிக நேரங்கள் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு சூழ்நிலையில், மேலதிக நேரத்திற்காக இவ்வளவு பணம் செலவிடப்பட்டுள்ளதை கணக்காய்வு அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

## சுனாமி...

என்பது போல, கடந்து விட்ட 20 வரு டங் களில் துயரத்தின் சுமைகள் மாறாத வடு க்களாகவே இருக்கின்றன. எவ்வாறாயினும், கடற் பேரலைத் தாக்கத்தின்போது அறியாப்பருவத்தில் இருந்த பச்சிளம் பருவத்தினருக்கும் அதன் பிறகு ஜனனித்தவர்களுக்கும் சுனாமி தாக்கத்தின் கடுமை தெரியாதிருக்கிறது என்பதில் வியப்பொன்றுமில்லை.

2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் நாள் சுனாமி கடற் பேரலை நாட்டின் கரையோரங்களைக் கடந்து ஊர்களுக்குள் நுழைந்தது. அவ்வேளையில், இப்போதிருப்பதைப் போன்று நவீன வானிலை காலநிலை முன்னறிவித்தல்கள்; ஏதுமிருக்கவில்லை. நவீன தொடர்பாடல் வசதிகளும் எல்லோருக்கும் கிடைத்திருக்கவில்லை.

இலங்கையின் கரையோரத்திலுள்ள 11 மாவட்டங்களில் சுனாமி கடற் பேரலையின் தாக்கம் இருந்தது. மூன்று முறை கடற்கரையைத் தாண்டி வந்த கடற்பேரலைகளின் தாக்கத்தால், மிகக் குறுகிய நேரத்துக்குள்,சுமார் 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட உயிர்கள் காவு கொள்ளப்பட்டன.

வடக்கு,கிழக்கு மாகாணங்களே அதிகமான உயிரிழப்புக்களையும் உடமை அழிவுகளையும் எதிர்கொண்டன.

அதிகளவான மக்கள் உயிரிழந்த மாவட்டமாக அம்பாறை பதிவு செய்யப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் 11 ஆயிரத்திற்கு மேற்பட்டோரும் ஹம்பாந்தோட்டை, காலி மாவட்டங்களில் பத்தாயிரத்திற்கு மேற்பட்டோரும் பலியாகினர். மட்டக்களப்பில் சுமார் 4 ஆயிரம் பேரும், யாழ்ப்பாணத்தில் சுமார் 2700 பேரும் பலியாகினர். முல்லைத்தீவு மாவட்டத்திலும் மூவாயிரத்திற்கு மேற்பட்டோர் பலியாகினர். திருகோணமலையில் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் பலியாகினர்.

மேலும், களுத்துறை, கொழும்பு, கம்பஹா மாவட்டங்களிலும் குறைந்தளவிலான உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. கிளிநொச்சி மாவட்டம் நேரடியாகச் சுனாமியால் பாதிக்கப்படவில்லை. ஆயினும் அந்த மாவட்டதைச் சேர்ந்தோர் சுமார் 560 பேர் சுனாமி தினத்தன்று பல்வேறு அலுவல்களுக்காக முல்லைத்தீவுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் போயிருந்தபோது உயிரிழந்திருந்தனர். அதுவே, இலங்கைக் கரையோரங்களான அம்பாறையை காலை 8.30 மணியை நெருங்கியபோது பேரழிவுகள் ஏற்பட்டன. அதன் அலைகள் சுமார் 7.12 மீற்றர்கள் அளவில் இருந்ததாகக் கூறப்பட்டது. மட்டக்களப்புக் கரையோரங்களை காலை 8.35 மணியளவிலும், ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, முல்லைத்தீவு மாவட்டங்களை காலை 8.50 மணியளவிலும், மாத்தறை மாவட்டக் கரையோரத்தை காலை 9 மணியளவிலும் களுத்துறை மாவட்டத்தை காலை 9.15 மணியளவிலும், கொழும்பு மாவட்டத்தை 9.20 அளவிலும் கம்பஹா மாவட்டத்தில் நீர்கொழும்பு பிரதேசத்தில் காலை 9.30 அளவிலும் சுனாமிப் பேரலைகள் பரவிச் சென்றன. சுனாமி பேபி

சுனாமி தாக்கத்தினால் கிழக்கு மாகாணமே மிகவும் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் 2004.12.26 அன்று சுனாமியால் காணாமல்போய், பின்னர் வைத்தியசாலையில் கண்டுபிடிக்கப்பட்ட அபிலாஷ் என்ற ஆண் குழந்தை ஒன்றுக்கு அப்போது 9 தாய்மார்கள் தங்களுடையது என உரிமை கோரியிருந்தனர்.

பின்னர் மரபணுப் பரிசோதனை மூலம் மட்டக்களப்பு குருக்கள்மடத்தைச் சேர்ந்த ஜெயராசா தம்பதியினரது என உறுதிப்படுத்தப்பட்டு பின்னர் அக்குழந்தை அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

தற்போது அந்த அபிலாஷிற்கு 20 வயது. அபிலாஷ் அப்போதிருந்து சுனாமி பேபி என்றே அழைக்கப்பட்டு வருகிறார்.

அபிலாஷ் வருடாவருடம் தனது இல்லத்தில் வைத்துள்ள சுனாமியால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் தூபியில் பெற்றோருடன் இணைந்து சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தி வருகிறார். சுனாமிப் பேரழிவினால் உயிரிழந்த அனைத்து உறவுகளுக்கும் தாம் இந்த நேரத்தில் அஞ்சலி செலுத்துவதாக அபிலாஷ் தெரிவிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார். சுனாமி 20 வருட துயர நினைவுகள் பற்றிய மேலும் பல விவரங்கள் உள்ளே பிரசுரமாகியுள்ளன.

## திருக்கோவில்...

தெரிவித்தனர். கடற்கரை ஓரம் விளையாடிக் கொண்டிருந்த இரு பிள்ளைகளை, கடல் அலை இழுத்துச் சென்ற போது, அவர்களைக் காப்பாற்றப் பாய்ந்த தந்தையும் அலையில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

காணாமல் போனவர்களைத் தேடும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

## உள்நாட்டு ...

43.7 வீதமாகும் என மத்திய வங்கி கூறியுள்ளது. 2023 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது முந்தைய ஆண்டை விட குறைந்த வேகத்திலேயே வளர்ந்துள்ளது. 2022 ஆம் ஆண்டிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிக பங்களிப்பு மேல் மாகாணத்தில் இருந்தே பெறப்பட்டது. இது 43.9 வீதமாக இருந்தது. என்றாலும், 2023 இல் இந்த வீதம் சிறிதளவு குறைந்துள்ளது என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## அநுர அரசின்...

சிங்கள செய்தி சேவையிடம் உறுதிப்படுத்தியுள்ளார்.

செனேஷ் பொறுப்பேற்கும் போது தன்னால் மூன்று மாதம் மாத்திரமே இதனை செய்ய முடியும் எனக் கூறியி ருந்ததாகவும், நேற்றுடன் (25) அது நிறைவடைவதாகவும் நளிந்த ஜயதிஸ்ஸ சுட்டிக்காட்டினார். செனேஷ் திஸாநாயக்க பண்டாரவின் இராஜினாமாவை தொடர்ந்து ரூபவாஹினி தொலைக்காட்சியின் தலைவராக கிஹான் த சில்வா நியமிக்கப்படவுள்ள நிலையில், இன்று (26) தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். ரூபவாஹினி தொலைக்காட்சியின் தலைவர் பதவியில் இருந்து செனேஷ் திஸாநாயக்க பண்டார நேற்று முன்தினம் திங்கட்கிழமை இராஜினாமா செய்திருந்தார்.

புதிய அரசாங்கம் நியமிக்கப்பட்டு மூன்று மாத காலப்பகுதியிலேயே அவர் இவ்வாறு பதவியை இராஜினாமா செய்துள்ளமை தொடர்பில் அரசியல் வட்டாரங்களில் அதிகளவில் விமர்சிக்கப்பட்டு வருகிறது.

பெரும்பான்மையான மக்கள் ஆணையால் தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கம் பதவியேற்ற பின்னர் இடம்பெற்ற இரண்டாவது பதவி விலகலாக செனேஷ் திஸாநாயக்க பண்டாரவின் இராஜினாமா கருதப்படுகிறது.

இதற்கு முன்னர் முன்னாள் சபாநாயகர் அசோக சபுமல் ரன்வல, தனது கல்வித் தகைமைகளை நிரூபிக்க முடியாத காரணத்தினால் பதவி விலகியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து, அமைச்சர் விஜித ஹேரத் மூலம் நியமிக்கப்பட்ட ரூபவாஹினி தொலைக்காட்சியின் தலைவர் செனேஷ் திஸாநாயக்க பண்டார பதவி விலகியுள்ளார்.

இது தொடர்பில் சமூக ஊடகங்களில் அதிகளவிலான விமர்சனங்கள் எழ ஆரம்பித்ததையடுத்து அதற்கு பதிலளிக்கும் விதமாக செனேஷ் திஸாநாயக்க பண்டார தனது முகப்புத்தகத்தில் விளக்கக் குறிப்பொன்றை பதிவிட்டிருந்தார்.

ரூபவாஹினி தொலைக்காட்சியானது அதன் பலவீனமான மற்றும் அங்கீகரிக்கப்படாத நிலையில் இருந்து விடுபட்டு அரசாங்க ஊடக நிறுவனமாக பொருளாதாரத்தை வலுப்படுத்திய விதத்தையும் முன்னாள் தலைவர் தனது குறிப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், தற்போதைய சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவுடன் கலந்துரையாடியதன்படி, தனது கடமைகளை பொறுப்பேற்று மூன்று மாத காலம் நிறைவடையவுள்ள நிலையில் பதவியில் இருந்து விலகியதாக செனேஷ் திஸாநாயக்க பண்டார தெரிவித்துள்ளார்.

## பாதுகாப்பு....

ஜயசிங்க ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் (25)தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பிற்காக பொலிஸ் உத்தியோகத்தர்களை நீக்கினால் அது அவசியம் என்று திருப்தியடைய முடியும் எனினும் பொருளாதார காரணங்களுக்காக முப்படையினரையும் நீக்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி நிலாந்தி கோட்டஹச்சி, சட்டத்தரணி என்ற வகையில் கூறியுள்ள கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல எனவும் அவர் தெரிவித்த ரவீந்திர ஜயசிங்க, உகண்டா அறிக்கை போன்று இதுவும் மக்களை தவறாக வழிநடத்தும் என்றும் தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்றத்தில் கிறிஸ்மஸ் கரோல் கீதம் இசைக்கும் நிகழ்வு





சபாநாயகரின் வழிகாட்டுதலின் கீழ் இலங்கை நாடாளுமன்றத்தின் பணியாளர்களினால் அவர்களினதும், இணைந்த சேவைகளின் பணியாளர்களினதும் பிள்ளைகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட கிறிஸ்மஸ் கரோல் கீதம் இசைக்கும் நிகழ்வு கடந்த 23ஆம் திகதி நாடாளுமன்றத்தின் வளாகத்தில் இடம்பெற்றது. கொழும்பு மறைமாவட்ட பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையைப் பிரதிநிதித்துவப்படுத்தி மறைமாவட்டத்தின் காணி மற்றும் சொத்துகளுக்கான இணை நிர்வாகி அருட்தந்தை க்ரிஷ்னக டிலான் பெரேரா தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. சகல இனங்கள், மதங்களுக்கிடையில் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கிறிஸ்மஸ் கரோல் கீதம் இசைக்கும் நிகழ்வில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ச அபேரத்ன மற்றும் திணைக்களங்களின் பணிப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். கரோல் கீதம் இசைக்கும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட முன்னர் பாராளுமன்ற வளாகத்தில் நிர்மானிக்கபட்டுள்ள மின்னொளி ஊட்டப்பட்ட கிறிஸ்மஸ் மரம் உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

# வரவு-செலவு அறிக்கையை சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## தேர்தல் ஆணைக்குழு எச்சரிக்கை

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் சிலர் இன்னமும் தமது வருமானம் மற்றும் செலவு அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை. இவர்களது பெயர் பட்டியலை பொலிஸாரிடம் வழங்கத் தீர்மானித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. பொலிஸார் இவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கையை எடுப்பார்கள் என ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.



பொதுத் தேர்தலில் வருமானம் மற்றும் செலவு அறிக்கையை சமர்ப்பித்த வேட்பாளர்களின் பட்டியல் மாவட்ட செயலகங்கள் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். கடந்த பொதுத் தேர்தலில் அரசியல் கட்சிகள், சுயாதீனக் குழுக்கள் சார்பில் 8388 வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலை 03 மடங்காக அதிகரிக்கும்

(சுப்ரமணியம் நிஷாந்தன்)



இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலைகள் மூன்று மடங்காக அதிகரிக்கும் என வாகன இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபாய்க்கு நிகரான டொலரின் பெறுமதி பாரிய அளவில் அதிகரித்துள்ளது. அத்துடன், வாகனங்களுக்கு விதிக்கப்படும் அதிக வரிகள், இறக்குமதி செய்யப்படும் நவீன வாகனங்களின் விலைகள் உயர்வு உள்ளிட்ட காரணிகளால் கடந்த 2020ஆம் ஆண்டை விட மூன்று மடங்கு அதிகமாக புதிய வாகனங்கள் விற்பனை செய்யப்படும் எனவும் வாகன இறக்குமதியாளர்கள் கூறியுள்ளனர்.

ஜப்பானில் டொயோட்டா நிறுவனம் தயாரிக்கும் பஸ்ஸை ான்று கடந்த 2020ஆம் ஆண்டில் 70 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட போதிலும் அதன் புதிய விலை 2 கோடியாக இருக்கும் என்றும் இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.ஷ போக்குவரத்து, சுற்றுலா போன்ற துறைகளில் பயன்படுத்தப்படும் வாகனங்களின் இறக்குமதிக்கு கடந்த 14ஆம் திகதிமுதல் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. 2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் தனியார் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி அளிக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கடந்த நாடாளுமன்ற அமர்வில் கூறியிருந்தார்.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் ஜனவரி மாத நடுப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக அரச தகவல்கள் தெரிவிக்கின்றன. அனுமதி கிடைத்தவுடன் தனியார் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பான நடவடிக்கைகள் தொடங்கப்படும் என இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# பிரத்தியேக செயலாளராக பி.பி.சிவப்பிரகாசம் நியமனம்

(கம்பளை நிருபர்)

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் மற்றும் ஆலோசகராக கலாநிதி. பி.பி. சிவப்பிரகாசம் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உயர் பீடம் இந்நியமனத்தை வழங்கியுள்ளது.

மேற்படி அமைச்சின் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்பின் வேண்டுகோளுக்கிணங்க தேசிய மக்கள் சக்தியின் கொள்கைத் திட்டம் மற்றும் அமைச்சின் கொள்கைத்திட்டம் என்பவற்றை திட்டமிடல், அமுலாக்கல் மற்றும் மேற்பார்வை செய்தல் போன்ற நடவடிக்கைகள் கலாநிதி. பி.பி. சிவப்பிரகாசத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

கலாநிதி. பி.பி. சிவப்பிரகாசம் தேசிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் மற்றும் மலையக தேசிய குழு உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக மலையக மக்களின் மனித உரிமை மற்றும் அபிவிருத்தி சம்பந்தமாக மலையக மக்கள் மற்றும் சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்காக செயல்பட்டு வந்தவராவார்.

இவர் பேராதனை, கொழும்பு, செலினாஸ் பல்கலைக் கழகங்களில்



கல்வி பயின்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதி அமைச்சர் பிரதீப்பின் மேற்பார்வையின் கீழுள்ள பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிதியம், புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபை, தொண்டமான் தொழில் பயிற்சி நிலையம், இறம்பொடை கலாசார நிலையம், பிரஜா சக்தி அமைப்பு, பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் பலப்படுத்துனர்கள், பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம், பனை அபிவிருத்தி சபை மற்றும் இதர அமைப்புகள் என்பவற்றிலே மக்கள் நலன் உரிமை சார்ந்த மாற்றங்களையும் செயல்திட்டங்களையும் அமுல்படுத்துவதே தங்களின் முக்கிய பொறுப்பாக இருக்கின்றது என சிவப்பிரகாசம் குறிப்பிட்டார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம் 11ஆம் நாள் வியாழக்கிழமை

**மேஷம்**: இன்று வெற்றி கிடைக்கும் நாள்.

**ரிஷபம்**: உங்கள் செயல்களை சுமூகமாகவும் வெற்றிகரமாகவும் செய்வீர்கள்.

**மிதுனம்**: இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடுவீர்கள்.

**கடகம்**: உங்கள் தன்னம்பிக்கை குறைந்து காணப்படும்.

**சிம்மம்**: உங்கள் வளர்ச்சி குறித்து மகிழ்ச்சியடைவீர்கள்.

**கன்னி**: இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது.

**துலாம்**: இன்று பணிகள் சுமூகமாக நடக்க கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

**விருச்சிகம்**: இன்று ஓய்வெடுக்க முடியாதபடி பணிகள் அதிகமாக இருக்கும்.

**தனுசு**: இன்று நீங்கள் உங்கள் வளர்ச்சியில் முன்னேற்றம் காணலாம்.

**மகரம்**: இன்று துடிப்பான நாளாக இருக்கும். கவனமுடன் செயல்பட்டால் நன்மை விளையும்.

**கும்பம்**: இன்றைய நாள் சிறப்பாக இருக்க உற்சாகமாக இருங்கள்.

**மீனம்**: இன்று உங்கள் செயல்களில் கவனம் தேவை.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று முழுவதும் ஏகாதசி.
**நட்சத்திரம்:** இன்று மாலை 06:51 வரை சுவாதி பின்பு விசாகம்.
**யோகம்:** அமிர்த,சித்த.
**சந்திராஷ்டமம்:** பூரட்டாதி,உத்திரட்டாதி.
**சூலம்:** தெற்கு.
**இராகு காலம்:** 01:30 PM முதல் 03:00 PM வரை.
**குளிகை:** 09:00 AM முதல் 10:30 AM வரை.
**எமகண்டம்:** 06:00 AM முதல் 10:30 AM வரை.

# கவிஞர் வெலிமடை ரபீக் காலமானார்



கவிஞர் வெலிமடை ரபீக் நேற்று காலமானார். “பூக்காலம்” என்ற நூல் ஆசிரியரான அவர் சிறிது காலம் சுகவீனமுற்று வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று காலமானார்.

# “மஹிந்தவுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் அச்சுறுத்தல் இருப்பதாக குறிப்பிடுவது பொய்யானது”



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் தாக்குதல் அச்சுறுத்தல் இருப்பதாக கூறப்படுவது முற்றிலும் பொய்யானது என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தேவானந்த சுரவீர தெரிவித்தார். கொழும்பில் நேற்றுமுன்தினம் (24) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இவ்வாறு குறிப்பிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

துறைசார் நிபுணத்துவ குழுவின் அறிக்கைக்கு அமையவே முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டிருந்த இராணுவ பாதுகாப்பு மீளப்பெறப்பட்டு, போதுமான அளவுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதிகள் அனைவருக்கும் வழங்கப்பட்டிருந்த இராணுவ பாதுகாப்பு முழுமையாக நீக்கப்பட்டுள்ளது. ஆனால் மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு குறித்து மாத்திரம் தான் அதிகளவில் பேசப்படுகிறது.

மஹிந்த ராஜபக்ஷவின் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் தாக்குதல் அச்சுறுத்தல் காணப்படுவதாகவும், ட்ரோனர் கருவி ஊடான தாக்குதல் அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குல் சம்பவங்களை நடத்தியவர்களுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் தாக்குதல் பற்றி பேசுவது ஒன்றும் ஆச்சரியத்துக்கு உரியதல்ல. கடந்த காலங்களில் மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட இராணுவத்தினர் அவர்களின் தென்னந்தோப்புக்களை பராமரிப்பதற்கும், வீட்டு நாய்களை பராமரிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டதை மக்கள் அறிவார்கள். மஹிந்தவின் உயிருக்கு அச்சுறுத்தல் காணப்படுவதாக குறிப்பிட்டுக் கொண்டு அவரை சார்ந்துள்ளவர்கள் அனுதாப அரசியல் இலாபம் தேடிக் கொள்கிறார்கள்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் கடந்த காலங்களை போன்று பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் செல்லவில்லை. மக்களோடு மக்களாகவே செயற்படுகிறார்கள். மஹிந்த ராஜபக்ஷ தேசிய பாதுகாப்பையும், இன நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்தியிருந்தால் ஓய்வுப் பெற்றதன் பின்னரும் இராணுவ பாதுகாப்பில் இருக்க வேண்டிய தேவை இருந்திருக்காது. முன்னாள் ஜனாதிபதிகளை பராமரிப்பதற்கு கோடி கணக்கில் அரசு செலவு செய்ய வேண்டிய தேவையில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவை: பதவி உயர்வு நடைமுறைகள் பற்றி அறிவிப்பு

(முகம்மட் முக்தார்)

இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவையின் இரண்டாம் தரத்தில் உள்ளோருக்கு அச்சேவையின் முதலாம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்குவது தொடர்பான நடைமுறையினை கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் அமல் எதிரிசூரிய அறிவித்துள்ளார். இது தொடர்பான சுற்றுநிருபமொன்றை மாகாண கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கு கல்வியமைச்சு அனுப்பி வைத்துள்ளது. 2022.01.02 ம் திகதி முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்ட இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவையின் நியமன அதிகாரி, பதவி உயர்வு வழங்கும் அதிகாரி என்ற வகையில் கல்வி அமைச்சின் செயலாளராவார்.சேவையில் இருந்த ஆசிரிய ஆலோசகர்களில் சேவை மூப்புக்கூடியோர் மேற்படி சேவையின் முதலாம் தரத்திற்கு உள்வாங்கப்பட்டனர். தற்போது சேவையில் உள்ள இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவையின் இரண்டாம் தர உத்தியோகத்தர்களுக்கு வினைத்திறமை தடை தாண்டல் பரீட்சை நடாத்தப்பட்ட பின் அச்சேவையின் முதலாம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கென தனியான பரீட்சை நடாத்தப்பட மாட்டாது.மாறாக மாகாண கல்விப்பணிப்பாளர் தலைமையில் திட்டமிடலுக்கு பொறுப்பான மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர், கல்வி அபிவிருத்திக்கு பொறுப்பான அல்லது பாடரீதியான பிரதிக்கல்விப்பணிப்பாளரை உள்ளடக்கிய குழு வினைத்திறமை காண் நேர்காணலை நடாத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நேர்காணலில் குறிப்பிட்ட ஆசிரிய ஆலோசகரின் ஆய்வுக்கட்டுரை, சிங்கள , ஆங்கில மொழித்தேர்ச்சி சான்றிதழ்களை சமர்ப்பிக்கப்படுவதன் மூலம் இவ்வினைத்திறமைகாண் தடை பரீட்சையில் சித்தியடையலாம் எனவும் அதனடிப்படையால் பதவி உயர்வு வழங்கப்படுமெனவும் மேலதிக செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

# உள்ளூராட்சித் தேர்தலில் உள்ளவை உரைக்கப்படுமா..?

அடுத்தடுத்து பேசப்படும் அரசியல் பரபரப்புக்களில் அடுத்ததாக உள்ளூராட்சித் தேர்தல் குறித்து ஆராயப்படுகின்றன. மக்களின் தேவைகளை கிராம, நகர மட்டங்களில் விஸ்தரித்தல், உள்ளூர் கட்டமைப்புக்களிலிருந்து அரசியல் தலைவர்களை உருவாக்குதல் இன்னும் அரச நிர்வாகத்தை மக்களின் காலடிக்கு பகிர்ந்தளித்தல் அல்லது விஸ்தரிக்கும் பல்வேறு நோக்கங்கள் இந்த ஆட்சி முறையில் உள்ளடங்கியுள்ளன. முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சராக இருந்த காலத்தில் இம்முறை அறிமுகமானது. இதற்கிணங்க 1987இல், உள்ளூராட்சி தேர்தல்களை நடத்த எத்தனிக்கப்பட்டும், அப்போதிருந்த அரசியல் நிலவரங்களால் நடைபெறாமல் போனது.

இவ்வாறு இழுபட்டுச் சென்ற இந்தத் தேர்தல் 1994ஆம் ஆண்டுதான் முதற் தடவையாக நடத்தப்பட்டது. ஐக்கிய தேசிய கட்சியின் 17 வருட தொடர்ச்சியான ஆட்சியை முடித்து வைக்கும் புதிய சூழ்நிலைகள் தென்படத் தொடங்கிய காலத்திலேதான், இந்த தேர்தலும் நடந்தது. இதனால்,

பெரிய கட்சிகள்கூட வரிந்து கட்டிக் கொண்டு இத்தேர்தலில் களமிறங்கியிருந்தன. எல்லோரும் எதிர்பார்த்ததுபோல ஐக்கிய தேசியக் கட்சியும் இதற்குப் பின்னர் 1994இல் பொதுத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டது. அன்றிலிருந்துதான், இந்த உள்ளூராட்சித் தேர்தல் தேசிய தேர்தல்களை நாடி பிடித்தறியும் அல்லது அடுத்து வரும் தேர்தலுக்கு அத்திவாரமிடும் அல்லது அளவிடும் கருவியாக நோக்கப்பட்டது. ஏன், 2018 உள்ளூராட்சித் தேர்தலிலும் இதுவே நடந்தது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உதயமாகி மூன்று வருடங்களுக்குள் நடந்த தேர்தலில், நல்லாட்சி அரசாங்கத்தின் மூன்றாவது வருடமே ஆட்டம் காணுமளவுக்கு முடிவுகள் இருந்தன. மொத்தமுள்ள 309 உள்ளூராட்சி மன்றங்களில் 240 சபைகளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கைப்பற்றியது. பின்னர் 2019 ஜனாதிபதித் தேர்தலில் அமோக வெற்றியையும் இக்கட்சி பெற்றுக் கொண்டது. இதுபோலதான், இவ்வாண்டின் செப்டம்பர் 21இல், நடந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் நடத்தப்பட்ட பெலியத்த பிரதேச சபைக்கான தேர்தலில், மொத்தமாக உள்ள 31 ஆசனங்களில், தேசிய மக்கள் சக்தி 16 ஆசனங்களை வென்றது. இந்தக் கையோடு, பொதுத் தேர்தலில் 159 ஆசனங்களைப் பெற்று அரசாங்கத்தை அமைக்கவும் இந்தக் கட்சிக்கு முடிந்தது. அடுத்த தேர்தல்களை அளவிடும் கருவியாக உள்ளூராட்சித் தேர்தல் மாறியுள்ளதாக இதையே சொல்கிறோம். இந்தத் தேர்தலுக்கு, அதிகளவு பணம் வாரியிறைக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிப்பதும் சிந்திக்கத்தக்கதே.

உள்ளூராட்சித் தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தி, வீண் செலவுகளைக் கட்டுப்படுத்தவும் சிறிய கட்சிகளைப் பலப்படுத்தவும் மைத்திரி,ரணில்தலைமையிலானநல்லாட்சிஅரசாங்கம்விரும்பியதும் இந்தப் பின்னணியில்தான். நூறு வீதம் விகிதாசாரத் தேர்தலாக இருந்த இம்முறைமை, 60 வீதம் வட்டாரமாகவும் 40 வீதம் விகிதாசாரமுமாக கலப்பு முறையில் மாற்றம் செய்யப்பட்டது. வீதாசாரமுறையில் நாலாயிரமாக இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை, கலப்பு முறைமையால் எட்டாயிரமாக உயர்ந்தது. என்னதான் காரணங்கள் கூறப்பட்டாலும் சிறிய கட்சிகளைப் பலப்படுத்தல் என்ற பதத்தில், பெரிய கட்சிகளான எதிரிகளைப் பலவீனப்படுத்தல் என்ற பொருள் மறைந்திருப்பதும் அவதானத்துக்கு உட்படாமலில்லை. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 240 உள்ளூராட்சி சபைகளும் ஓரிரு ஆசனக் குறைபாடுகளால் சிறிய கட்சிகளில் தங்கியிருக்க வேண்டி ஏற்பட்டதை ஞாபகத்துக்கு உட்படுத்தி இவ்விடயத்தை நிரூபணம் செய்கிறோம்.

புது வருடத்தின் முதற் காலாண்டுக்குள் நடைபெறலாமென எதிர்பார்க்கப்படும் உள்ளூராட்சித் தேர்தல், எந்த முறையில் நடைபெறுமென்ற ஆரூடங்களும் இப்போது வெளிவரத் தொடங்கிவிட்டன. அரசாங்கத்துக்குள்ள அமோக பலம் எதையும், எந்த நேரத்திலும் செய்யும் அல்லது சாதிக்கும் அதிர்ச்சிச்சூழல் ஏற்பட்டுள்ள புதிய அரசிற் கலாசாரமிது. இதனால், அதிரடி மாற்றங்களைக் கண்டு எவரும் ஆச்சர்யப்படத் தேவையில்லை. பாராளுமன்றத்தில் சட்டமூலத்தை சமர்ப்பிப்பதுதான் அரசுக்குள்ள வேலை. அடுத்த கணமே அது சட்டமாகிவிடும். கலப்பு முறைத் தேர்தலை ரத்தாக்கல் அல்லது பழைய விகிதாசார முறையைக் கொண்டு வருதல் இல்லாவிட்டால் தங்களுக்குத் தேவையான இன்னுமொரு முறையை அறிமுகஞ் செய்தல் எல்லாம் இந்த அரசுக்கு சாதாரணமானவையே! ரணிலின் தந்திரங்களுக்குப் பலியாகாமல் அல்லது முதலாளித்துவத்தின் சூழ்ச்சிகளுக்கு இரையாகாமல் நாட்டை நகர்த்திச் செல்லும் செயற்பாடுகளை முன்னகர்த்தும் இந்த அரசாங்கம் தனி வழியில் செல்வதற்கே சந்தர்ப்பங்கள் உள்ளன. எனவே, இப்போதைக்கு எதையுமே கட்டியங்கூற முடியாது.

இத்தனைக்கும் இந்த உள்ளூராட்சித் தேர்தலுக்கு இன்னுமொரு சிறப்பும் உள்ளது. வேட்பு மனுக்கள் கோரப்பட்டு, கட்டுப்பணங்கள் செலுத்தப்பட்டு மற்றும் தேர்தலுக்கான திகதி தீர்மானிக்கப்பட்டாலும், சிலவேளைகளில், இந்தத் தேர்தல் நடைபெறாமலிருப்பதுமுண்டு. இவ்வாறு கடந்த 2002 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் இடம்பெற்றிருக்கின்றன. இச்சம்பவங்களால் பாதிப்புற்ற பலர், இன்னும் இந்த அதிர்ச்சிகளிலிருந்து மீளாதிருக்கின்றனர்.குறிப்பாக போட்டியிட முன்வந்த அரச உத்தியோகத்தர்களின் நிலைமைகள், அவர்களது பொருளாதாரத்தைப் படுகுழியில் புதைத்து விடுவதும் உண்டு. தேர்தலில் போட்டியிட விரும்பும் அரச ஊழியர்கள் சம்பளமில்லாத விடுமுறையைப் பெற்றுக்கொண்டே, வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதுண்டு. சில வேளைகளில், இத்தேர்தல் இழுத்தடிக்கப்பட்டால் மாதக்கணக்கில் ஏன், 2002 தேர்தல் இழுத்தடிக்கப்பட்டதால், வருடத்தைக் கடந்தும் சம்பளம் பெற முடியாதிருந்த நிலைமைகளும் ஏற்பட்டிருந்தன. இந்த அச்சத்தால், இத்தேர்தலில் போட்டியிட அரச ஊழியர்கள் பலர் விருப்பமிருந்தும் முன்வராதுள்ளனர். இப்பிரச்சினையின் எச்சங்கள் இன்னும் நிலைக்கவே செய்கின்றன. கடந்த 2023 மார்ச்சில் நடக்கவிருந்த தேர்தலுக்கு கோரப்பட்ட வேட்பு மனுக்களையா? அல்லது புதிய வேட்பு மனுக்களையா? கோருவதென்ற இழுபறியே அது. சட்டமியற்றும் நாடாளுமன்றத்தில் மிகையளவான பலம் இந்த அரசுக்கு இருப்பதால், இதற்கும் இலகுவான தீர்வு கிடைக்கும்.

# ஜனாதிபதி நிதியம் மோசடிகள் தொடர்பில் விசாரணை ஆரம்பம்



கனூஷியா புஷ்பகுமார்

ஜனாதிபதி நிதியத்தில் இருந்து பணம் பெற்ற அமைச்சர்களின் பட்டியலும், அதனுடன் அரசியல் தொடர்புபட்டவர்களின் பட்டியலும் நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்டதன் மூலம் ஜனாதிபதி நிதியை துஷ்பிரயோகம் செய்வது தொடர்பில் விவாதங்கள் எழுந்துள்ளன.

இந்நிலையில், ஜனாதிபதி நிதியில் ஏதேனும் முறைகேடு நடந்துள்ளதா என்பதை கண்டறிய பொலிஸ் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு (CID) விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி நிதியை துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு கோரி பொலிஸ் தலைமையகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து இந்த விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

கடந்த 2005ஆம் ஆண்டு முதல் 2024ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் 34 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி நிதியத்தின் முக்கிய நோக்கங்களுக்குப் புறம்பான நோக்கங்களுக்காக மில்லியன் கணக்கான ரூபாவை பெற்றுக்கொண்டமை அண்மையில் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின் போது தெரியவந்துள்ளது.

12.25 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான தொகை முறைகேடு செய்யபட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவின் ஆட்சிக் காலத்தில், நன்கொடையாளர்களின் நிதிப் பங்களிப்பிலிருந்து 237,120 ரூபா ஆரம்ப மூலதனத்துடன் ஜனாதிபதி நிதியம் ஆரம்பிக்கப்பட்டது.

1978ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க சட்டத்தின் மூலம் இலங்கை நாடாளுமன்றத்தால் இந்த நிதி நிறுவப்பட்டது.

இது ஜனாதிபதியின் நிதியம் என அறியப்படுகிறது மற்றும் அதை நிர்வகிப்பதன் மூலம் சட்டத்தின் விதிகளின்படி செயல்படும் அதிகாரம் தற்போதைய ஜனாதிபதிக்கு உள்ளது.

அரசாங்கத்தின் கணக்காய்வாளர், ஜனாதிபதி நிதியத்தின் கணக்குகளை ஆண்டுதோறும் தணிக்கை செய்து வருகிறார்.

ஜனாதிபதி நிதியத்தின் நிதியானது, வறுமைக்கு நிவாரணம் வழங்குவதற்கும், கல்வி அறிவை மேம்படுத்துவதற்கும், மதங்களை மேம்படுத்துவதற்கும், தேசத்திற்கு சேவை செய்தவர்களுக்கு மானியங்கள் வழங்குவதற்கும், பொது மக்களின் நலனுக்கான பணிகளை செய்வதற்கும் பயன்படுத்தப்படுவதுடன் இது அபிவிருத்தி லொத்தர் சபை மற்றும் பொது நன்கொடைகள் மூலம் பராமரிக்கப்படுகிறது.

இலங்கை பிரஜைகள் மட்டுமே ஜனாதிபதி நிதியத்தில் இருந்து பணத்தைப் பெற விண்ணப்பிக்க முடியும் அதற்கென மேலும் சில விதிமுறைகளும் நிபந்தனைகளும் உள்ளன.

முக்கியமாக நாட்டு பிரஜைகள் ஜனாதிபதி நிதியத்தை சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு பயன்படுத்த முடியும்.

மேலும், ஜனாதிபதி நிதியத்தின் இணையத்தளத்தில் ஜனாதிபதி நிதியத்தின் அங்கீகாரம் பெற்ற வைத்தியசாலைகளின் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, மூளை அறுவை சிகிச்சை, புற்றுநோய் சிகிச்சை, எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை, இடுப்பு - முழங்கால் - தோள்பட்டை மற்றும் முழங்கை மூட்டு மாற்று அறுவை சிகிச்சை, கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, கண் அறுவை சிகிச்சை, கல்லீரல் புற்றுநோய்க்கான சிகிச்சை மற்றும் நுரையீரல் செயலிழப்பிற்கான அறுவை சிகிச்சை ஆகியவை முக்கியமாக ஜனாதிபதி நிதியத்தால் ஆதரிக்கப்படுகின்றன.




> 12.25 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான தொகை முறைகேடு
>
> குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை

2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நவம்பர் மாதம் 30ஆம் திகதி வரை ஜனாதிபதி நிதியத்தினால் வறுமைக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில், இரண்டு பிரிவுகளின் கீழ் உதவிகள் வழங்கப்பட்டுள்ளதை பிபிசி சிங்கள செய்தி சேவை வெளிப்படுத்தியுள்ளது.

குறித்த காலப்பகுதியில் பல்வேறு நோய்களுக்கான மருத்துவ உதவியாக 2802 நோயாளர்களுக்கு 583,130,217.97 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

வறுமையை ஒழித்து வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் 28 குடும்ப அலகுகளுக்கு 2,515,535 ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

கல்வி மற்றும் அறிவு மேம்பாட்டிற்காக குறித்த காலப்பகுதியில் மஹபொல புலமைப்பரிசில் திட்டத்திற்காக 1,342,991,195 ரூபாயும், 2024ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 3000 மாணவர்களுக்கு தலா 6000 ரூபாய் எனும் அடிப்படையில் 166,497,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 6000 மாணவர்களுக்கு தலா 6000 ரூபாய் எனும் அடிப்படையில் 323,532,000 ரூபாயும், குறித்த மாணவர்கள் சாதாரணத் தரப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமையின் அடிப்படையிலான புலமைப்பரிசிலாக வழங்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள 100 கல்வி வலயங்களில் இருந்து முதலாம் தரம் தொடக்கம் 11ஆம் ஆண்டு வரை கல்வி கற்கும் 78,000 மாணவர்களுக்கு தலா 3,000 ரூபா வீதம் 1, 517825,700 ரூபாய் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறான பின்னணியில், ஜனாதிபதி நிதியத்தை கடந்த அரசாங்கங்களில் அமைச்சர்கள் எவ்வாறு பெற்றுக்கொண்டனர் என்பது குறித்து தற்போது அனைவர் மத்தியிலும் கேள்விகள் எழுந்துள்ளதுடன் இதனால் பல விமர்சனங்களும் மேலெழுந்துள்ளன.

இவ்வாறு எழுப்பப்படும் விமர்சனங்களுக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிக்கையொன்றை வெளியிட்டு பதிலளித்திருந்தார்.

எனினும், அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்திய தகவலின்படி, கடந்த அரசாங்கங்களின் போது அரசியல்வாதிகளுக்கு வழங்கப்பட்ட தொகையை விட அதிக தொகை வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

ஜனாதிபதி மற்றும் ஆளுனர்கள் சபையின் கருத்தின்படி, ஜனாதிபதி நிதியில் இருந்து பணத்தை நிதி உதவியாக வழங்க முடியும் என ஜனாதிபதியின் உதவிச் செயலாளர் பி.எச். கொலம்பகே பிபிசி சிங்கள செய்தி சேவையிடம் தெரிவித்துள்ளார்.

2005 - 2024 காலப்பகுதியில் 34 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தில் இருந்து பல கோடி ரூபாய் பணம் வழங்கப்பட்டதாக வெளிப்படுத்தப்பட்டதையடுத்து சில எம்.பி.க்கள் ஜனாதிபதி நிதியில் இருந்து இரண்டு அல்லது மூன்று கோடிகளை பெற்றிருந்தமையும் தெரியவந்துள்ளது.

ஜனாதிபதி நிதியத்தின் நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்ததிலிருந்து சரியான ஒரு ஆட்சியை மக்கள் அனுபவித்திருக்கவில்லை. ஊழல் மற்றும் மோசடியால் நிரம்பிய ஆட்சியும், பதவிப் பேராசையால் தவிக்கும் ஆட்சியாளர்களும் பல ஆண்டுகளாக மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

இதன் விளைவாகவே, 2022ஆம் ஆண்டில் காலி முகத்திடல் போராட்டமும் வெடித்தது.

எனினும், அத்தகைய போராட்டத்தின் பின்னரும் ஆட்சியாளர்கள் மோசடிகளிலும், ஊழலிலும் ஈடுபட்டுள்ளமை தற்போது பகிரங்கமாகியுள்ளது. இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. மாற்றத்தை எதிர்ப்பார்க்கும் அநுர குமார திஸநாயக்க அரசாங்கம் இதன் உண்மைகளை வெளிப்படையாக மக்கள் முன்நிறுத்த வேண்டும். ஏதேனும், ஊழல்கள் இடம்பெற்றிருப்பின் அதற்கான சட்ட நடவடிக்கைகள் பாரபட்சம் பாராது உரியவர்கள் மீது எடுக்கப்பட வேண்டும்.



# மன வடுக்கள் இன்னமும் ஆறவில்லை

# சுனாமிக்கு இன்றுடன் 20 வயது

**சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளும் உயிரிழந்தவர்களின்எண்ணிக்கையும்**

| நாடுகள் | உயிரிழந்தவர்களின் | காணாமல் போனோரின் எண்ணிக்கை எண்ணிக்கை |
|---|---|---|
| | 1,22,232 | 1,13,937 |
| இந்தோனேசியா | 30,974 | 4,698 |
| இலங்கை | 10,776 | 5,640 |
| இந்தியா | 5,395 | 2,993 |
| தாய்லாந்து | 150 | - |
| சோமாலியா | 82 | 26 |
| மாலைத்தீவு | 68 | - |
| மலேசியா | 59 | - |
| மியன்மார் | 10 | - |
| தன்சானியா | 2 | - |
| பங்களாதேஷ் | 1 | |
| கென்யா | | |



அகல்யா டேவிட்

“கிறிஸ்மஸ் இற்கு அடுத்த நாள், அன்று காலை வழமையான அலுவல்களில்தான் நாம் மூழ்கியிருந்தோம். 6 வயதான மூத்த மகள் புவிஜா அறநெறிப் பள்ளிக்கூடத்திற்குப் போய் விட்டார். 4 வயதான நடுமகள் கருஜா வீட்டு வாசலில் விளையாடிக் கொண்டிருந்தார். ஒரு வயது கைக்குழந்தையான மகன் விரோஜன் மண்டபத்திற்குள் இருந்து விளையாடிக் கொண்டிருந்தான்.

அந்நேரம் பக்கத்து வீட்டுப் பிள்ளை ஜீவிதா (14 வயது) ஓடி வந்து சொன்னார் கடல் தண்ணி பாய்ந்து வருகிறது என்று. நான் முதலில் அதை பெரிதுபடுத்தவில்லை கடலலை மேலெழும்பி தண்ணீர் கரையில் சத்தத்துடன் விழுவது வழமையான ஒன்றுதானே என்று நினைத்திருந்தேன்.

திரும்புவதற்கிடையில் ஆக்ரோஷமாக ஆர்ப்பரித்த கடற் பேரலைவருவதைக் கண்டு கைக்குழந்தையைத் தூக்கிக் கொண்டேன். ஆனால், அந்தோ பரிதாபம் ஆர்ப்பரித்து வந்த இராட்சத கடலலை என் கையிலிருந்த குழந்தையைப் பறித்துச் சென்றது. என் பச்சிளம் பாலகன் என்னைத் தாண்டி என்னை பார்த்துக்கொண்டே தண்ணீரில் அடிபட்டுச் சென்றான்.

நானும் நிலை தடுமாறினேன் பாய்ந்தோடி வந்த பாரிய அலையில் அள்ளுண்டு சென்றேன். நீண்ட நேரமாக நான் அந்த பலமான நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டுக் கொண்டே இருந்தேன்.

ஒரு தென்னந் தோப்பைக் கடந்து சுனாமிப் பேரலை என்னை நீண்ட தூரம் அடித்துச் சென்று கொண்டே இருந்தது. இடையில் அகப்பட்ட அந்தத் தென்னை மரங்களில்,நான் அடிபட்டேன். இழுத்துக் கொண்டு சென்ற கடற்பேரலை, அருகிலிருந்த வாவிக்குள் கலந்தது.

என்ன செய்வதென்று யோசிக்க கூட இயலாத நிலையில் மூச்சுத் திணறலுடன் கல்லடிப் பாலத்தின் கீழாக நான் அடித்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தேன். என்னுடைய கை, கால், உடம்பெல்லாம் காயம். கரைபுரண்டு பாய்ந்தோடும் நீரினால் அடித்து வரப்பட்ட கல்லும், முள்ளும், கட்டைகளும், கம்பிகளும், என்னைக் காயப்படுத்தின. அந்தக் காயத்தின் வலிகளையெல்லாம் அப்போது என்னால் உணர முடியவில்லை.

கரை புரண்டோடும் நீரில் மிதந்து அடித்துச் செல்லப்பட்டபோதும் அழுது ஆர்ப்பரித்ததால் என் தொண்டை வறண்டே இருந்தது.

என்னைப்போல் சிலர், பேரலை நீரில், தூரத்தே அடித்துச் செல்லப்படுவதை காண்கிறேன். என்னால் என்னையே காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை எப்படி அவர்களை நான் காப்பாற்றுவது? நான் பேரலை நீருக்கு மேலாக கொஞ்சம் மேலே வந்து மூச்சு விட முயற்சி செய்து கொண்டிருந்தேன். ஆனால், ஒரு கட்டத்திற்கு மேலாக என்னால் சற்றும் இயலாமல் போய்விட்டது.

என் கைகள் கால்கள் எல்லாம் தளர்ந்து போவதை உணர்ந்தேன். உடம்பு சோர்வாகிக் கொண்டிருந்தது. ஏதோ ஒரு பாரத்திலிருந்து உடல் விடுவிக்கப்படுவது போல ஒரு உணர்வு ஏற்பட்டது. அதுதான் மரணத்தின் விளிம்பு என்பதை உணர்ந்தேன். நான் நிம்மதி அடைவது போல உணர்ந்தேன். அவ்வளவு தூரம் நீரினால் அடித்து வரப்பட்ட எனக்கு அந்த உணர்வு நிம்மதி போலத்தான் தோன்றியது.

ஒரு மனிதனின் மரண நேரத்தில் எல்லா விடயத்தையும் நாங்கள் மறந்து விடுவோம் என்பதை நான் உணர்ந்தேன். நான் யார்? என் பிள்ளைகள் யார்? என்று எல்லா விடையத்தையும் அந்தத் தண்ணீரில் அடிபட்ட தருணத்தில் நான் மறந்திருந்தேன். நான் உயிர் தப்ப மாட்டேன் என்ற உணர்வு மட்டுமே இருந்தது.

அடுத்த நிமிடத்தில் சட்டென்று ஒரு கை, என் கையைப் பற்றிப் பிடித்தது. நான் மேலே தூக்கப்பட்டேன். ஒரு படகில் வந்தவர்கள் என்னை மீட்டிருக்கிறார்கள். அதன் பிறகு நடந்தது எனக்குத் தெரியாது. நான் மயங்கி விட்டேன்.

எனக்கு இது ஒரு கனவு போல இருந்தது. இப்பொழுது கூட நான் இன்னும் உயிருடன் இருக்கின்றேன் என்று என்னால் நம்ப முடியாமல் இருக்கின்றது.

சுனாமி வந்து 20 வருடங்களான போதிலும் இன்று கூட என்னால் இயல்பாக இருக்க முடியவில்லை. கடலை திரும்பிப் பார்க்க முடியவில்லை. நாங்கள் பட்ட உடல்இ உளக் காயங்கள் எதைக் கொண்டும் ஈடு செய்ய முடியாதவை. உடல் வலி எனக்கு இன்றும் இருக்கின்றது. எனது நெஞ்சுப் பகுதி 20 ஆண்டுகள் கடந்து இன்றும் அவ்வப்போது வலிக்கும். என் உறவுகளின் உயிரிழப்பும் அப்படித்தான்.

அதை விட என் குழந்தைகள் மூவர் கடலலையால் காவு கொள்ளப்பட்டார்கள். மூத்த மகள் புவிஜாவோடு சேர்த்து அன்றைய தினம் அறநெறிப் பாடசாலைக்குச் சென்றிருந்த 53 பேர் ஆர்ப்பரிக்கும் பேரலையால் காவு கொள்ளப் பட்மார்கள்.

நான் வாழ்ந்த புதுமுகத்துவாரம் வீடு வாசல் இப்பொழுது காடுமண்டிக் கிடக்கிறது. இப்பொழுது நான் கடலை, கடலலையைஇ நிமிர்ந்து பார்ப்பதில்லை. தண்ணீரைக் கண்டால் கண்ணீர் வழிந்தோடுகிறது. இன்றும் என் நெஞ்சை மனக்காயம் வாட்டுகிறது. துயர் தாளாமல் துவண்டு விடுகிறேன். என்னால் அந்த சம்பவத்தை விட்டு இன்று வரை மீள முடியவில்லை. இன்னும் எத்தனை வருடம் போனாலும் அந்த சம்பவம், இன்று நடந்தது போன்றஇ துயரம் கலந்த சோகம் தொடர்ந்து வந்து கொண்டே யிருக்கும்.”





திஸ்ஸமகாராம - கிரிந்தயில் கரையொதிங்கிய கப்பல்





இது இருபது ஆண்டுகளுக்கு முன் பாதிக்கப்பட்ட பல்லாயிரம் பேரில் மட்டக்களப்பு புதுமுகத்து வாரத்தைச் சேர்ந்த ஜெயசந்திரிக்கா (49 வயது) எனும் ஒருவருடைய துயரம் தாளாத துன்பியல் கதை.

இவ்வாறும், இதைவிடத் துயர் நிறைந்ததாகவும் இன்னும் ஏராளமானோரின் சுனாமிக் கதைகள் உண்டு.

தென்னாசியாவை உலுக்கிய துன்பியல் சம்பவம் ஒன்று 2004ஆம் ஆண்டு டிசெம்பெர் மாதம் 26ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. முழு உலகத்தையும் ஒரு கணம் அசைத்துப் பார்க்கும் அளவுக்கு அந்த நாள் அமைந்திருந்தது. அந்த சம்பவம்தான் கடல் கோள் எனக் கூறப்படும் சுனாமி இயற்கை இடராகும்.

சுனாமித் தாக்கம் பல கிராமங்கள் வரைபடத்தில் இருந்தே துடைத்தெறியப்பட்டன. நினைத்திராத பொழுதில் கண்முன்னே எல்லாம் சில நிமிடங்களில் நடந்து முடிந்துவிட்ட அந்த கோரக் காட்சியின் விளைவுகள் விவரிக்க முடியாதவை. இழப்பின் அதிர்ச்சியில் இருந்து இன்னமும் விடுபடாத ஏராளமானோர் உள்ளார்கள்.

சுனாமி காரணமாக தென்னாசியாவின் 11 நாடுகளைச் சேர்ந்த சுமார் இரண்டு இலட்சம் பேர் உயிரிழந்தனர். இந்து சமுத்திரத்தின் மத்தியில் ஏற்பட்ட கடல் நில நடுக்கத்தினால் அன்றைய தினம் காலை 8.20 மணியளவில் இலங்கையின் கரையோரப் பகுதிகளை கடற் பேரலை ஆர்ப்பரித்து வந்து தாக்கியது. இராட்சத அலைகள் கடலில் இருந்து சுமார் 10 அடிக்கு மேல் எழும்பி வந்து கரையைக் கடந்து ஊர்களுக்குள் நுழைந்து உயிர்களைக் காவுகொண்டன. வாழ்விடங்களை வாரிச் சுருட்டிக் கொண்டு போனது. சொத்துக்களை அழித்தது.

சுனாமித் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டோர் அவர்கள் தமது வீடுகள், உறவுகள், எல்லாவற்றையும் இழந்து ஒன்றும் இல்லாத நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். நிர்க்கதியான அவர்கள் நிவாரண முகாம்களில் வாழ வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அவ்வேளையில் இன, மத, மொழி, பிரதேச, பால் வேறுபாடுகளைக் கடந்து மனித நேய உள்ளங்கள் ஓடோடி வந்து உதவிக்கு விரைந்தனர்.

இந்த இயற்கைச் சீற்றத்தினால் இலங்கையின் வடக்கு கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகள் பாதிக்கப்பட்டன. வடபகுதியில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மாவட்டங்களும் கிழக்குப் பகுதியில் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களும் தெற்கில் ஹம்பாந்தோட்டை, காலி மாவட்டங்களும் பெருமளவு அழிவினை எதிர்நோக்கின.



பாதிக்கப்பட்ட பெண்: ஜெயசந்திரிக்கா குழந்தைவடிவேல்

ஈற்றில், 2004ம் ஆண்டின் கிறிஸ்மஸ் கழிந்த 26ஆம் திகதி ஞாயிறு என்பது இலங்கை உட்பட தென்னாசிய நாடுகளில் இரண்டு இலட்சம் பேரைக் காவு கொண்டு மரண ஓலத்தை உருவாக்கி, பல இலட்சம் பேரை அகதிளாக்கி, அதிர்ச்சியையும் ஆறாத் துயரத்தையும் மாறாத சோகத்தையும் பதிவு செய்த நாளாக வரலாற்றில் இடம்பிடித் திருக்கிறது.



(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)




நுரைச்சோலை சுனாமி வீட்டுத்திட்டம் - அக்கரைப்பற்று

# 20 ஆண்டுகள் கடந்தும் பேரலையாய் சீறும் இனவாத சுனாமி

## சவுதி அரேபியா வழங்கிய நிதியில் 500 வீடுகள் முஸ்லிம்களுக்காக கட்டப்பட்டன..!

## நுரைச்சோலை வீட்டுத்திட்டம் சிதைந்து சின்னா பின்னமாகியும் பாதிக்கப்பட்டோருக்கு வழங்காதது ஏன்...?

ஈராயிரத்து நான்காம் ஆண்டின் டிசம்பர் 26ஆம் திகதி என்பது நாட்டின் கரையோரத்தில் வாழ்ந்த பல்லாயிரக்கணக்கான மக்களைக் கதறியழ வைத்து கிலிகொள்ளச் செய்த ஒரு நாளாகும்.



"சுனாமி" – இது கரையோர மக்களைக் கதிகலக்கி, கண்ணீர் மல்க வைத்த ஒரு சொல். "சுனாமி" என்று அழைக்கப்படும் இந்த ஜப்பானியச் சொல்லின் "பேரலை" எனும் அர்த்தம் இப்போது இலங்கையர்களுக்கு, அதிலும் குறிப்பாக கரையோரப் பகுதி மக்களுக்கு நன்கு பரீச்சயமான ஒன்றாகிவிட்டிருக்கிறது.

கடந்த 2004 டிசெம்பரில் ஏற்பட்ட உயிரிழப்புக்களும் பொருளாதார அழிவுகளும் அந்தப் பாதிப்புக்களிலிருந்து இன்றுவரை முழுமையாக மீளமுடியாமலே ஒரு சில குடும்பங்களின் காலங்கழிக்கின்றன.

2004ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி இந்தோனேசியாவில் ஏற்பட்ட 8.9 றிச்டர் அளவிலான பூகம்பத்தினால் இந்தோனேசியாவின் ஆச்சேயில் மாத்திரம் ஒரு லட்சத்து எழுபதாயிரம் பேரும் இலங்கை– இந்தியா உட்பட 11 பிற அண்டை நாடுகளில் இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் பேரும் வெறும் மூன்றே நிமிட நேர சுனாமிப் பேரலையால் காவு கொள்ளப்பட்டிருந்தார்கள்.

அன்றைய தினம் காலை 8.20 மணியளவில், கடலை விட்டு கண்ணிமைக்கும் நேரத்தில், அதிவேகமாக ஆர்ப்பரித்து மேலெழுந்த பேரலைகள் ஒரு சில நிமிடங்களில் கரையைக் கடந்து ஊருக்குள் ஊடுருவியிருந்தது.





இதனால், உழைப்பிடங்களாகவும் உறைவிடங்களாகவும் உல்லாசபுரிகளாகவும் ஓய்விடங்களாகவும் எழில் கொஞ்சும் தங்கக் கடற்கரைகளாகவும் திகழ்ந்த இடங்களெல்லாம் ஒரு சில நிமிட நேரத்தில் நிசப்த மயானங்களாக மாறிவிட்டிருந்தன.

சுமார் ஐந்து நிமிட நேரத்திற்கும் குறைவான சுனாமித் தாக்கம் நம் நாட்டில் அரை இலட்சத்துக்கும் சற்றுக் குறைவானோரின் வாழ்வை அழித்து விட்டுப் போனது.

அநேகரை அநாதைகளாகவும் ஆயிரமாயிரம் பேரை தங்களது இருப்பிடங்களிலிருந்து வெருண்டோடச் செய்து அகதிகளாகவும் ஆக்கி விட்டிருந்தது.

எப்படியோ இன்றோடு 20 வருடங்கள் கழிந்துவிட்ட தற்போதைய நிலையில் சுனாமி ஏற்படுத்திய பேரழிவுத் தாக்கங்களிலிருந்தும், மனப்பாதிப்புகளிலிருந்தும் மக்கள் மீட்சி பெற முடிந்திருக்கிறது என்று பொதுவாகத் திருப்திப்பட்டாலும், சிலருக்கு இன்னமும் சுனாமி விட்டுச் சென்ற மாறாத தடங்கள் ஆறாத வடுக்களாகவே உள்ளன.

சுனாமி இன, மத, பேதம் பார்த்துத் தாக்கவில்லை. வற்றாத அருட்கடலை தமது வாழ்வாதாரத்திற்காக நம்பிக் கரையில் வாழ்ந்த அனைத்து இன மீனவர் சமுதாயத்தையும் சுனாமி அழித்து விட்டுப் போனது.

கடல் அலை என்பது தாலாட்டு இசை என்றே நம்மில் பெரும்பாலானோர் நினைத்தும் அதை அனுபவித்தும் மகிழ்ந்துமிருந்தனர்.

ஆனால், உலகின் ஒரு பகுதியை உலுக்கி அசைத்துப் பார்க்கும் துன்பியல் ஒலியாக பூகம்பமும் அதனால் உண்டான பேரலைகளும் மாறாமல் வரலாற்று மனத்திரையில் பதிந்து விட்டிருக்கின்றன.

எவ்வாறாயினும் வாழ்வதற்குத் தோதாகவுள்ள இந்த ஒரேயொரு பூமிப்பந்தில் இயற்கையின் நியதிகளுக்கும் இணங்கித்தான் வாழவேண்டும் என்ற யதார்த்தத்தையும் உணர வேண்டிய தேவைப்பாடும் உள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டோரைப்போல சுனாமியால் பாதிக்கப்பட்டோரும் 20 வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் இன்னமும் அகதிகளாக வாழ நிர்ப்பந்திக் கப்பட்டிருக்கின்றார்கள் என்பது நமது நாட்டின் "ஒருநாடு பல நீதி" என்ற வெறுப்புக் கலந்த கொள்கைகளையிட்டு மனம் வருந்த வேண்டியுள்ளது.

முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் 2005ல் சவூதி அரேபிய இளவரசர் நைப் அவர்களின் அழைப்பின் பேரில் உம்றா எனும் மார்க்கக் கடமைக்காக சவூதி அரேபியா சென்றிருந்தார்.

அப்போது இலங்கையில், சுனாமியினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஒன்றான அம்பாறை கரையோர சமுதாய மக்களுக்கு உதவுமாறு அவர் சவூதி இளவரசரைக் கேட்டுக் கொண்டார்.

இதற்கு இணங்கிய இளவரசர் இந்தோனேசியாவுக்கு எனத் தயாரிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்தை இலங்கைக்கு வழங்கும்படி உத்தரவிட்டார்.

அதற்கமைவாக சவூதி அரசாங்கத்தினால் அக்கரைப்பற்று நுரைச்சோலையில் 50 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரச காணியில் 500 வீடுகளுக்கான திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

அதில், சவூதி அரசினால் அப்போதைய மதிப்பீட்டின்படி சுமார் 1000 கோடி ரூபாய்கள் செலவில் 500 வீடுகளை உள்ளடக்கி சர்வதேசத் தரத்திலான வைத்தியசாலை, ஆண்கள் பெண்களுக்;கான தனித் தனியான பாடசாலைகள், முன்பள்ளிப் பாடசாலை, நூலகம், சந்தைத் தொகுதி, சனசமூக நிலையம் விளையாட்டு மைதானம், பொழுது போக்குப் பூங்கா பள்ளிவாசல், பஸ் நிலையம் என்பன முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரபின் முயற்சினால் கட்டி முடிக்கப்பட்டன.

சகல உள்கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட இந்த வீடமைப்புத் திட்டத்தை சவூதி அரேபியா அரசாங்கம் 2009ஆம் அண்டளவில் பூர்த்தி செய்து அதன் மாதிரிச் சாவிக் கொத்தை அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைத்தது. இலங்கைக்கான சவூதி அரேபியாவின் முன்னாள் தூதுவர் அப்துல் அஸீஸ் அல் ஜம்மாஸ்,வீட்டுத் திட்டத்தை உத்தியோகபூர்வமாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவிடம் கையளித்திருந்தார்.

ஆனால் பின்னர்தான் இனவாத சுனாமி ஆவேசம் கொண்டெழுந்து ஆர்ப்பரிக்கத் தொடங்கியது. பேரின மதவாதிகள் கொதித்தெழுந்தார்கள்.

பேரின மதவாத அமைப்பான சிஹல உறுமய இந்த நவீன வீடமைப்புத் திட்டத்தினை எதிர்த்து, தீகவாபி காணியில் முஸ்லிம்களை குடியேற்றுவதாக குற்றச்சாட்டி, அங்கு கட்டப்பட்ட வீடுகளும் ஏனைய கட்டுமானங்களும் அவை முஸ்லிம்களுக்குக் கிடைக்கக் கூடாது என்று கருதி நீதிமன்றம் சென்று வழக்கு தாக்கல் செய்தது.

இந்த வழக்கின் பிரகாரம் நுரைச்சோலை வீடுகளைத் தனி இனமொன்றுக்கு வழங்கக்கூடாது என்றும் அனைத்து இனத்தவர்களையும் உள்ளடக்கி இவ்வீடுகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வாவினால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இத்தீர்ப்பு வழங்கப்பட்டு 15 வருடங்கள் கடந்தும் இவ்வீடுகள் இன்று வரை பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாது இழுத்தடிப்புச் செய்யப்படுவது கவலைக்குரியதாகும்.

அதன் காரணமாக கடந்த 20 வருடங்களாக இந்த விடயம் இழுபறியில் உள்ளது. கட்டிட நிர்மாணங்கள் கவனிப்பாரின்றி காடுமண்டி சிதைந்து சிதிலமடைந்து வருகின்றன.

அதன் காரணமாக அக்கரைப்பற்றுப் பிரதேசத் சேர்ந்த சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அடைக்கலம் இல்லாமல் போனது. அவர்கள் கடந்த 20 வருடங்களாக அகதிகளாவே அலைந்து திரிகிறார்கள்.



நாட்டின் மற்றெல்லாப் பாகங்களிலும் சுனாமியால் பாதிக்கப்பட்டு நிர்க்கதியானவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு அவர்கள் இயல்பு நிலைக்குத் திரும்பியிருக்கும் நிலையில், அக்கரைப்பற்று மக்களுக்கு மாத்திரம் அநீதி இழைக்கப்பட்டு அவர்கள் அநாதரவாக விடப்பட்டுள்ளார்கள்.

இப்படியாக கசப்பும் கவலையும் நிறைந்ததாக கடற்பேரலைத் தாக்கத்திற்குள்ளான கரையோர சமுதாய மக்களின் வாழ்வு கரைந்து கொண்டிருக்கின்றது.

நாட்டின் அரசியல் பேரின மதவாத இழிநிலைக்கு இது தக்கதோர் சான்றாக இன்றளவும் இருந்து வருகின்றது.

### திருப்தி தராத திருப்பம்

அக்கரைப்பற்று – நுரைச்சோலை சுனாமி வீட்டுத் திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட 500 வீடுகளையும், புனரமைத்து பயனாளிகளிடம் கையளிக்க ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தீர்மானித்துள்ளார் என்று சமீப சில நாட்களாக செய்திகள் அடிபடத் துவங்கின.

இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலிட் ஹமூத் அல் கத்தானி அண்மையில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவைச் சந்தித்து கலந்துரையாடிய போது, இவ்வீடுகளை விரைவில் மக்களிடம் கையளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் இதனைப் பயனாளிகளுக்குப் பகிர்ந்தளிப்பதே சவூதி அரேபியாவின் எதிர்பார்ப்பென்றும் செய்திகள் வெளிவந்து நிம்மதியைத் தந்தன.



ஆயினும், பழைய அரசுகளைப் போல நிறைவேற்று அதிகாரம் கொண்ட தற்போதைய மாற்றுச் சிந்தனை அரசாங்கமும் அதன் அரசாட்சியும் கூட இந்த விடயத்தில் எந்தக் கரிசனையும் காட்டவில்லை போல் தெரிகிறது என்றே விரக்தியாளர்கள் வேதனை வெளியிடுகின்றனர்.

இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதிக்கப்பட்டவர்களாகப் பார்க்காமல் அவர்களை இன, மத, மொழி பிரதேசவாத அடிப்படையில் நோக்குவதே இலங்கையில் பிரச்சினைகள் நீடிப்பதற்கான காரணம் என்று ஆதங்கம் வெளியிடுகிறார் காணி உரிமைகளுக்கான அம்பாறை மாவட்ட செயலணியின் இணைப்பாளர் கே. நிஹால் அஹமட்.

பாதிக்கப்பட்ட மக்களின் இன மத மொழி பிரதேசப் பின்னணிகளைக் கருத்திற்கொள்ளாது முதலில் அவர்கள் எதிர்கொண்ட பாதிப்புக்களை ஏற்று அங்கீகரித்து அதற்கு நிவாரணத்தையும் வழங்கி, மீண்டும் அத்தகைய பாதிப்புக்கள் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்தினாலே இலங்கையின் இனவாத பேரழிவுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம் என அவர் மேலும் வலியுறுத்தினார்.



09-DEC-2009 12:13 District Secretary 063 2222130

2009 13:10 FAX 84 11 SA

Supreme

SL GNR-TEXT

Attn: Secretary

4

28617 —

Case No. SC/FR/178/8

Ms Pubudinie Wickremaratne appears for intervenient –Petitioner- Bogahawatte Ralalage Abeyratne Bandara- Patron Deegawapiya Bauddha Samithiya.

Vishva Gunaratne with Eranga Devapura appears for Mrs Hema Gunathilake- Director of the Buddhist Association.

Dr Almeida Gunaratne with Lasitha Chaminda for Intervenient Petitioners – Don Nihal Chandikumara Attayagalla – Secretary Shanthi Foundation and A.A.Nissanka – Waga Anshaya, Deegavapi.

Prasantha Lal de Alwis with Sampath Gamage for Premadasa Weerahendi Government Servants Buddhist Association.

Mrs Jayasinghe B Tilakaratne , DSG with Suharshi Herath, SC for 1st –4th , 6th, 7th, 8th and 12th Respondents.

I.S. de Silva with Deeptha Perera, for 30th and 55th Respondents.

ARGUED ON : 19.06.2008, 09.09.2008 and 30.10.2008

DECIDED ON : 01st June 2009

03 JUN 2009 SRI LANKA

Sarath N Silva, C.J.

Petitioners have been granted leave to proceed on the alleged infringement of the fundamental rights guaranteed by Articles 10, 12(1) and 12(2) of the Constitution. Interim relief was granted by the bench which dealt with the matter at the stage of considering leave to proceed, restraining the Respondents from leasing or in any way alienating the land in question situated at Norochcholai in the Ampara District. The Petitioners include the ...erable Thera, being the Viharadhipathi of the Deeghavapi Raja Maha



மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மாவட்டத்தின் பிரதான கிறிஸ்துமஸ் நள்ளிரவு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் அருட்தந்தையர்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப் பலியாக ஒப்புக்கொடுத்தனர். இதன்போது இயேசு பிறப்பினை குறிக்கும் வகையில் நள்ளிரவு பாலன் திருச்சொரூபம் வைக்கப்படுவதையும் பக்தர்களையும் படங்களில் காணலாம்.

படங்கள் : எஸ்.ஆர்.லெம்பேட்

# வடக்கு மாகாணத்தில் முறையற்ற இடமாற்றங்கள் - முறைகேடுகள்



## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு ஆளுநருக்கு எடுத்துரைப்பு

**▮ பு.கஜிந்தன்**

வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற முறையற்ற இடமாற்றங்கள் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆளுநருக்கு தெரியப்படுத்தினர். இடமாற்றங்கள் பெயரளவுக்கே இடம்பெற்றன. என்பதைச் சுட்டிக்காட்டிய அவர்கள் ஆசிரிய ஆலோசகர்களுக்கான இடமாற்றங்கள் பல ஆண்டுகளாக நடைபெறவில்லை என்றும் குறிப்பிட்டனர்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், வடக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மாலை (24) நடைபெற்றது.

இச்சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக் கப்பட்டது.

இச்சந்திப்பிபல் கருத்து தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன்,

வடக்கு மாகாணத்தில் ஆசிரிய வளப் பங்கீடு சரியான முறையில் நடைபெறவில்லை எனச் சுட்டிக்காட்டிய அவர், ஆசிரிய தொழிற்சங்கங்கள் மற்றும் கல்வி அமைச்சின் சகல அதிகாரிக ளையும் இணைத்து அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் கலந்துரையாடல் நடத்தி இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் முன்பள்ளிக் கல்வி தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனக் கோரியதுடன், ஆசிரியர்களுக்கு தற்போதைய காலத்துக்கு ஏற்ற வகையிலான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் குறிப் பிட்டனர்.

இது தொடர்பாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தால் கோரிக்கை கடிதம் ஒன்று ஆளுந ரிடம் ஒப்படைக்கப்பட்டது.

# முல்லைத்தீவில் தேவாலயங்களுக்கு இராணுவ பாதுகாப்பு



**▮ அந்தணன்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் நத்தார் பண்டிகை விசேட ஆராதனைகள் நேற்று முன்தினம் (24) நள்ளிரவு சிறப்பாகப் பல ஆலயங்களில் நடை பெற்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 32 கிறிஸ்தவ தேவாலயங்களில் கிறிஸ்து பிறப்பினை மக்கள் வழிபாடுகள் பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர்.

அதேவேளை ஆலயங்களில் இராணுவத்தினர்,பொலிசார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டதாகப் புதுக்குடியிருப்பு பிரதேச பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ஹேரத் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு கடமைகளைக் கண்காணிக்கும் நடவடிக்கையினை அவர் மேற்கொண்ட போது புதுக்குடியிருப்பு இரணைப்பாலை பற்றிமா ஆலயத்தில் அமைக்கப்பட்ட பாலன் பிறப்பு குடிலுக்குச்சென்று பார்வை யிட்ட பின்னர் ஊடகவியலாளரிடம் இந்த தகவலைத் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் உணவு கையாளும் நிலையங்களில் திடீர் பரிசோதனை

பண்டிகைக் காலத்தையொட்டி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உணவு கையாளும் நிலையங்களின் சுகாதார நிலையை மேம்படுத்தும் நோக்குடன் வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளரின் வழிகாட்டலின் கீழ் நேற்று திடீர் பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி.ஆ. கேதீஸ் வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் நல்லூர், உடுவில் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. இந்தக் களப் பரிசோதனையில் சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த 9 குழுக்கள் ஈடுபட்டிருந்தன.

இவர்களால் நேற்று 76 உணவு கையாளும் நிலையங்கள் மேற்பார்வை செய்யப்பட்டன. இவற்றில் 28 உணவு கையாளும் நிலையங்களில் குறைபாடுகள் காணப்பட்டிருந்தன.

12 உணவு கையாளும் நிலையங்களுக்கு குறைபாடு களை சீர்செய்யும்படி எழுத்துமூல அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. 15 உணவு கையாளும் நிலையங்களில் தரமற்ற உணவுகள் பறிமுதல் செய்யப்பட்டன. 2 உணவு கையாளும் நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன் னெடுக்கப்படவுள்ளது.

அதன் தொடர்ச்சியாக யாழ். மாவட்டத்திலுள்ள ஏனைய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக ளிலும் இந்தப் பரிசோதனை நடவ டிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப் படும் என்றார்.

# யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் கிறிஸ்மஸ் ஆராதனை



**▮ பு.கஜிந்தன்**

யாழ். மறை மாவட்ட ஆயர் அருட் கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையிலான கிறிஸ்மஸ் நள்ளிரவு ஆராதனைகள் யாழ்ப் பாணம் புனித மரியன்னை பேரால யத்தில், நள்ளிரவு நடைபெற்றது.

யேசுபாலனின் பிறப்பைக் கொண்டாடும் கத்தோலிக்க மக்கள் பெருமளவில் கலந்து கொண்டு, ஆராதனை நிகழ்வுகளில் பங்கு கொண்டனர். அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்ட 51 இராணுவ தலை மையகம் மற்றும் யாழ். மறை மாவட்ட ஆயர் இல்லம் ஆகியவற் றின் ஏற்பாட்டில் நத்தார் கரோல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

# எலிக்காய்ச்சல்: இருவர் அவசர சிகிச்சைப் பிரிவில்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் எலிக்காய்ச்சல் அறிகுறிகளுடன் நேற்று முன்தினம் (24) இருவர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

4 நாட்கள் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட மேற்படி இருவரும் நோய் மிகவும் தீவிரமடைந்த நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மக்கள் தற்போது முன்னெடுக்கும் தடுப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டும். ஆரம்பத்திலேயே வைத்தியசாலைக்கு வர வேண்டும். சிகிச்சை எடுக்க வேண்டும். இதன் மூலம் நோய் தீவிரமாகுவதையும் இறப்பையும் தடுக்கலாம், குறைக்கலாம்." – என்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

# கிராம உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி செயலமர்வு



நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளத் தகுதியான நபர்களை அல்லது குடும்பங்ளைத் தெரிவு செய்வதற்கான தரவு உள்ளீடு செய்யும் எண்ணீட்டாளர்களாகச் செயற்படவுள்ள பருத்தித்துறை பிரதேச செயலக கிராம உத்தி யோகத்தர்களுக்கான பயிற்சி செயலமர்வு உதவி பிரதேச செயலாளர் பசுபதி தயானந்தன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடை பெற்றது.

இந்தப் பயிற்சி செயலமர்வில் வளவாளராக புள்ளிவிபர உத்தியோகத்தர் நா.சுதந்திரன் கலந்துகொண்டு பயிற்சியை வழங்கினார்.

இந்தச் செயலமர்வில் எண்ணீட்டாளராகச் செயற்படவுள்ள வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட 35 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு பயிற்சியைப் பெற்றனர்.

மேலும் இந்த நிகழ்வில் நிர்வாக கிராம அலுவலர் மற்றும் நலன்புரி நன்மைகள் சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

நலன்புரி நன்மைகள் சபையின் கொடுப்பனவைப் பெற இரண்டாம் கட்டமாக விண்ணப் பித்தவர்களுக்கான வீடுகளுக்குச் சென்று தரவுகளைச் சேகரிக்கும் எண்ணீட்டுப் பணி விரைவில் அரசால் நடைமுறைப்படுத்தப்பட வுள்ளது.

# வடக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சியில்

வடக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலகம் எதிர்வரும் 3ஆம் திகதியில் இருந்து கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளது.

வடக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலகம் தற்போது யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகின்றது. இதற்கான புதிய அலுவலகம் ஒன்று கிளிநொச்சி நகரில் பிரதான தபாலகம் அருகில் அமைக்கப்பட்டது.

புதிதாக அமைக்கப்பட்ட அலு வலகம் எதிர்வரும் 3 ஆம் திகதி திறக்கப்பட்டு அன்று தொடக்கம் கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளது.

புதிய கட்டடத்துக்கான அடிக்கல் 4 ஆண்டுகளுக்கு முன்னர் அப்போதைய மாகாண காணி ஆணையாளர் குகநாதனால் நாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் மார்கழிப் பெருவிழா

**▮ பு.கஜிந்தன்**

தென்னாட்டு அருள் மிகு ஐம்பூத நாதர் திருக்கோவில் மற்றும் அதன் மாணவர் சபையின் எற்பாட்டில், மார்கழிப் பெருவிழாவில் ஆன்மீக சிந்தனையை வெளிப்படுத்தும் வகையில் மார்கழித்திங்கள் 10 நாள் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

திருமுறைகள், நகர் ஊர்வலம் நிகழ்வில் நகர் ஊர்வலமானது வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரா தேவஸ்தான முன்றிலில் இருந்து ஆரம்பமாகி அங்கிருந்து கே.கே.எஸ் வீதி, யாழ் வைத்தியசாலை வீதி, மணிக்கூட்டுக் கோபுர வீதியூடாக வந்து யாழ்.இந்திய மத்திய கலாசார மத்திய நிலையம்வரை சென்று நிறைவுபெற்றது.

தமிழர்களின் பாரம்பரிய கலையான பொம்மலாட்டம் உள்ளிட்ட கலைகளும் நகர் ஊர்வலத்தை அலங்கரித்ததுடன் இரு யானைகளும் பவனி வந்தன.

இவ் நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் கலந்து கொண்டார்.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் அருளிய 1023 திருமுறைகள், திருநாவுக்கரசு நாயனார் அருளிய 456 திருமுறைகள், சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய 07ஆம் திருமுறைகள், மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய 08 ஆம் திருமுறைகள், திருமூல தேவர் அருளிய 10 ஆம் திருமுறைகள், 12 ஆழ்வார்கள் அருளிய 11 ஆம் திருமுறைகள், தெய்வச்சேக்கிழார் அருளிய 12ஆம் திருமுறைகள், மெய்கண்ட சமுத்திரம் போன்ற நூல்கள் அடங்கிய தொகுதிகளை வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகனிடம் இந்தியப் பழனி ஆதீன குருவானவர் கையளித்தார்.



# முன்னாள் அமைச்சரின் அடியாட்கள் மீனவர்களுக்கும் இடையில் முறுகல்

(ருத்ரா)

ஆற்றோடு சேர்த்து வேலிக் கட்டைகள் இட்டு காணியை பாதுகாத்து வருவது தொடர்பாக முன்னாள் இராஜாங்க அமைச்சரின் சகோதரர்களில் ஒருவரின் அடியாட்களுக்கும் மீனவர்களுக்கும் இடையில் செவ்வாய்க்கிழமை முறுகல் நிலை ஏற்பட்டது. இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்வை பெற்றுத் தருவதாக மீனவ அமைப்பு பிரதிநிதிகளிடம் உறுதியளித்தார்

வாழைச்சேனை பேத்தாழை துறைமுக இறங்கு துறை பகுதிக்கு திடீர் கள விஜயமொன்றை மட்டக்களப்பு மாவட்ட தமிழரசு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மேற்கொண்டார்.

இதன்போது, துறைமுகப் பகுதியில் வாழும் மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டன. பிரதேச மீனவ அமைப்பினர், சட்ட விரோத காணி அபகரிப்பு தொடர்பாகவும் தங்களது வாழ்வாதாரம் பாதிப்படுவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனிடம் தெரிவித்தனர். மேலும் பிரதேச மீனவ அமைப்பினர் கருத்து தெரிவிக்கையில், துறைமுகப் பகுதியின் அருகாமையிலுள்ள ஆற்றுக் கரையோர அரச காணி ஒன்றினை மீனவர்கள் தங்களது நாளாந்த போக்குவரத்து மற்றும் மீன் பிடி நடவடிக்கைகள் மற்றும் படகு நிறுத்தும் செயற்பாட்டிற்கு நீண்டகாலமாக பயன்படுத்தி வந்துள்ளனர்.



தற்போது இதற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் முன்னாள் இராஜாங்க அமைச்சரின் சகோதரர்களில் ஒருவர் ஆற்றோடு சேர்த்து வேலிக் கட்டைகள் இட்டு காணியை பாதுகாத்து வருகின்றார். அதனால் செல்வதற்கு தடை ஏற்படுத்தி உள்ளதாகவும் அடைக்கப்பட்ட கட்டைகளை அகற்றி தருமாறும் மீனவ அமைப்பினர் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

இவ்விடயத்தைக் கேட்டறிந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா சாணக்கியன், மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் இவ்வாறான செயற்பாட்டிற்கு தாம் இடமளிக்கப்போவதில்லை என்றும் இவ்விடயம் தொடர்பான பல்வேறுபட்ட ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார். ஆற்றங்கரையோடு உள்ள காணிகளின் குறிப்பிட்டளவு பிரதேசம் அரசிற்கு சொந்தமானதாகவும் அவற்றினை தனியார் அபகரிக்கமுடியாது. ஆனால் அதனை பராமரிக்கலாமே தவிர வேலி இடவோ,மதில் கட்டவோ முடியாது என்றார். இவ்வாறு கலந்துரையாடல் இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளை இராஜாங்க அமைச்சரின் சகோதரர் அவரது அடியாட்களுடன் சம்பவ இடத்துக்கு வருகை தந்ததும் மீனவர்களுக்கும் அடியாட்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

# சீயோன் தேவாலயத்தில் கிறிஸ்மஸ் பிரார்த்தனை



(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு பிள்ளையாரடியில் அமைந்துள்ள சீயோன் தேவாலயத்திலும் கிறிஸ்மஸ் தின ஆராதனைகள் தேவாலயத்தின் தலைமை போதகர் ரொஷான் மகேசன் தலைமையில் நடைபெற்றன. இயேசு பாலகனின் பிறப்பை பற்றிய பாடல்கள் பாடி இங்கு ஆராதனைகள் நடைபெற்றன.

கிறிஸ்மஸ் தின கலாசார நிகழ்வுகள் இடம் பெற்றதோடு, கிறிஸ்தவ மாணவர்களுக்கு இயேசு பாலகனின் பிறப்பின் மகத்துவம் பற்றிய ஆசி உரைகளும். பிரதான போதகரால் வழங்கப்பட்டன.

# நுரைச்சோலை வீட்டுத்திட்டம்: 15 வருடமாகியும் மக்களுக்கு இல்லை

(முகம்மட் முக்தார்)

நாட்டில் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு இன்றுடன் இருபது ஆண்டுகள் பூர்த்தியாகும் நிலையில் சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட அக்கரைப்பற்று நுரைச்சோலை மீள் குடியேற்ற கிராமம் மக்களிடம் கையளிக்கப்படாமல் இருப்பது குறித்து சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரபின் முயற்சியினால் சவூதி அரேபிய அரசாங்கத்தின் நன்கொடையாக நிர்மாணிக்கப்பட்ட நூரைச்சோலை சுனாமி மீள்குடியேற்ற கிராமத்தில் 500 வீடுகளும், பாடசாலை, சந்தை, பள்ளிவாயல் உள்ளிட்ட பல அடிப்படை வசதிகளை உள்ளடக்கியது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கென தனியாக வடிவமைக்கப்பட்ட இம்மீள்குடியேற்ற கிராமத்தை மக்களிடம் கையளிப்பதில் ஏற்பட்ட அரசியல் கழுத்தறுப்பு, இழுபறி காரணமாக உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டது.

வழக்கின் முடிவில் அம்பாறை மாவட்ட இனவிகிதாசாரத்தின் அடிப்படையில் பிரித்து வழங்குமாறு முன்னாள் பிரதம நீதியரசர் சரத்.என். சில்வா தலைமையிலான நீதியரசர்கள் அமர்வு உத்தரவிட்டிருந்தது.

இவ்வுத்தரவு வழங்கப்பட்டு சுமார் 10 வருடங்களாகியும் இதுவரை பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவ்வீடுகள் வழங்கப்படவில்லை.

தற்போது இம்மீள்குடியேற்ற கிராமம் காடுகளால் சூழப்பட்டு, கொடிய விச ஜந்துக்கள், யானை மற்றும் ஆபத்தான விலங்குகள், பிராணிகளின் உறைவிடமாக மாறியுள்ளதுடன் வீடுகள் யாவும் சேதமாகியுள்ளன.

இந்த வீட்டுத்திட்டத்தை மீண்டும் புனர்நிர்மாணம் செய்து தருவதாகவும் அதனை மக்களுக்கு வழங்குமாறும் சவூதி அரசாங்கம் முன்வந்த போதும் இதனை முன்னெடுக்க வேண்டிய அரச அதிகாரிகள் அக்கறையற்று இருப்பது குறித்து சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# மட்டு. புனித மரியாள் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது





(வெல்லாவெளி நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் இயேசு பாலகனின் பிறப்பை முன்னிட்டு சகல கிறிஸ்தவ தேவாலயங்களிலும் நள்ளிரவு ஆராதனைகள் இடம்பெற்றன. இந்நிலையில் மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்திலும் நள்ளிரவு ஆராதனைகள் மட்டக்களப்பு மறை மாவட்டத்திற்கு புதிதாக நியமனம் பெற்றுள்ள ஆயர் அண்டன் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது. மேலும், ஆலய பங்குத்தந்தைகளான ஸ்டனிஸ்லோஸ் மற்றும் ஜெயகாந்தன் உட்பட பங்குத்தந்தைகளினால் இந்த வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்பேது யேசு கிறிஸ்துவின் பிறப்பைக் குறிக்கும் வகையில் பாலன் பிறப்பு தெட்டியில் யேசு பாலனின் உருவம் ஆயரினால் வைக்கப்பட்டு யேசு கிறிஸ்து பிறப்பு நினைவு கூரப்பட்டது. அதனை தொடர்ந்து விசேட யேசு கிறிஸ்து பிறப்பு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. நள்ளிரவு ஆராதனைகள் வழிபாடுகளில் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

# அவசரகால நிலைகளுக்கு முகங்கொடுத்தல்; பயிற்சி நிகழ்வு



அவசரகால நிலைகளுக்கு முகங்கொடுத்தல்' தொடர்பான பயிற்சி நிகழ்வு" சாய்ந்தமருது றியாலுல் ஜன்னா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அனர்த்தங்களால் பாதிக்கப்படும் மக்களிடத்தில் மீட்பு மற்றும் மனிதாபிமான பணிகளை முன்னெடுப்பதில், இளைஞர்கள் மற்றும் தொண்டர்கள் மத்தியில் நற்செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்கில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக், கிழக்கு மாகாணக் கல்வி திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் என். எம்.ஏ. மலீக் ஆகியோரின் பங்குபற்றலுடன் இது நடைபெற்றது.

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் பல்வேறு அனுபவமிக்கவரும், காலநிலை மாற்றம் தொடர்பான செயற்பாட்டாளரும், தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி. அஸ்லம் சஜா இதில் வளவாளராக கலந்து கொண்டார்.

எதிர்கால அனர்த்தங்களின்போது சிவில் சமூக அமைப்புகளின் வகிபாகம் மற்றும் செயற்பாடுகள் குறித்து விளக்கங்கள் அளிக்கப்பட்டன.அத்துடன், இந்தப் பிராந்தியத்தில் அனர்த்தங்கள் ஏற்படுமிடத்து உரிய அரச நிறுவனங்களுடன், அரச சார்பற்ற நிறுவனங்கள் எவ்வாறு இணைந்து பணியாற்றுவது தொடர்பாகவும் குழு செயற்பாடுகள் மூலம் இதன்போது விரிவாக ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆதம்பாவா எம்.பியின் கூற்று சிறுபிள்ளைத்தனமானது

## உதுமா லெப்பை எம்.பி காட்டம்

(கே எ ஹமீட்)




அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காரைதீவு, நிந்தவூர், அட்டப்பளம் போன்ற பிரதேசங்களில் வாழும் 72 ஆயிரம் மக்களுக்கான குடிநீர் தொடர்பான விடயங்களுக்கு தீர்வுகாண வேண்டுமென சம்மாந்துறை பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் என்னால் முன்மொழியப்பட்டு நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு நேரம் போதாது என நாடாளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவா கூறியது சிறுபிள்ளைத்தனமான விடயமாகும் என சம்மாந்துறை பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் உதுமாலெப்பை தெரிவித்தார்.

சம்மாந்துறை பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் எ .ஆதம்பாவா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கிராமிய அபிவிருத்தி சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ, நாடாளுமன்ற உறுப்பினர்களான தாஹிர் , ஏ.எம்.மஞ்சுல ரத்னாயக்க, கே.கோடிஸ்வரன், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.நிசாம் காரியப்பர், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம் ஏ. நௌஷாட் மற்றும் திணைக்களத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் உதுமாலெப்பை தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில். கடந்த வருடமும் இவ் வருடமும் எமது மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் சம்மாந்துறை கொள்ளாவெளி வடிச்சல் பிரதான வாய்க்கால் (எல்பி) உடைந்ததால் விவசாயிகளின் காணிகள் பாதிக்கப்பட்டதுடன், சாய்ந்தமருது, மாளிகைக்காடு ,காரைதீவு , அட்டப்பளம் பிரதேசங்களில் வாழும் 72 ஆயிரம் மக்கள் குடிநீரின்றி மிகவும் கஷ்டப்பட்டனர்.

இந்த வாய்க்கால் தற்காலிகமாக திருத்தியமைக்க நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உயர் அதிகாரிகளும் நீர்ப்பாசன திணைக்களத்தின் உயர்அதிகாரிகளும் இணைந்து செயற்பட்டனர்.

எனவே, சம்மாந்துறை கொள்ளாவெளி பிரதான வாய்க்கால் உடைக்கப்படாமல் நிரந்தரமான தீர்வு காணப்பட வேண்டும். அப்போதுதான் விவசாயிகளுக்கு ஏற்படும் தொடர்ச்சியான நஷ்டங்களையும் 72,000 மக்களின் குடிநீர் பிரச்சினை களுக்கும் நிரந்தரமான தீர்வு காணலாம் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் உதுமாலெப்பை தெரிவித்தார்.

# குருக்கள்மடம் புனித பிரான்சிஸ் அசிசியார் தேவாலயத்தில் ஆராதனை

(வெல்லாவெளி நிருபர்)





குருக்கள்மடம் புனித பிரான்சிஸ் அசிசியார் தேவாலயத்தில் நடைபெற்ற நத்தார் நள்ளிரவு விசேட ஆராதனை. யேசு பாலன் பிறந்த தினமாக கொள்ளப்படும் டிசம்பர் 25 நத்தார் விசேட நள்ளிரவு ஆராதனை நேற்று 25 மட்டக்களப்பு குருக்கள்மடம் புனித பிரான்சிஸ் அசிசியார் தேவாலயத்தில் நத்தார் நள்ளிரவு விசேட ஆராதனை இடம்பெற்றது. இந் நிகழ்வுகள் ஆலய அருட்தந்தை ஹர்சதன் ரிச்சட்ஸ தலைமையில் இடம்பெற்றதுடன், திருப்பலியும் ஒப்பு கொடுக்கப்பட்டது. இவ் ஆராதனையில் பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

# அரச நிதி, நிலையான அபிவிருத்தியை நோக்கிச் செல்லவில்லை



(கியாஸ் ஷாபி)

அரசாங்கத்துக்கும் மாகாண நிர்வாகங்களுக்கும் இடையில் ஒருங்கிணைந்த போக்கை கடந்த கால அரசாங்கங்கள் பேணவில்லை. இதன் காரணமாக, திருகோணமலை மாவட்டத்திலும் அரச நிதி, நிலையான அபிவிருத்தியை நோக்கிச் செல்லவில்லையென வெளி விவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்தார். திருகோணமலை மாவட்டத்துக்கான முதலாவது அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்ட செயலகத்தில் செவ்வாய்க்கிழமை(24) நடைபெற்றது. இதன்போது, உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மாகாண நிர்வாகத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கு கிழக்கு மாகாணத்திற்கு பொருத்தமான ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பது குறித்து, அரச அதிகாரிகள் மகிழ்ச்சி அடைய வேண்டும். கடந்த காலங்களில், அபிவிருத்தி குழு கூட்டங்களில், எடுக்கப்பட்ட பல்வேறு தீர்மானங்கள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. எனவே, நிலுவையில் உள்ள திட்டங்களை, மீண்டும் ஆரம்பிப்பதற்கு பொருத்தமான தொழில்நுட்ப வரைவுகளை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அரசு நிதி வீண் விரயமாவதை தடுக்க முடியும்.

# கபரகல தோட்ட மக்களுக்கு காணிகள் வழங்க ஏற்பாடு

## பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் நடவடிக்கை



**க.கிஷாந்தன்**

கபரகல தோட்ட மக்களுக்குத் தனி வீடுகளை அமைப்பதற்கான காணிகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாகத் தோட்ட நிர்வாகத்துடன் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஆர்.இராஜாராம் கலந்துரையாடியுள்ளார்.

அண்மையில் கபரகல தோட்டத்தில் தீயினால் பாதிக்கப்பட்ட 20 குடும்பங்கள் தொடர்பாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணனின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

இது தொடர்பாக அவரின் பணிப்புரையின் பேரில் ஆர்.இராஜாராம் கபரகல தோட்டத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடி அவர்களுடைய பாதிப்புகள் தொடர்பான விடயங்களை ஆராய்ந்ததுடன் உடனடியாக சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரண பொருட்களைப் பெற்றுக் கொடுத்தார்.

தோட்ட நிர்வாகம் இவர்களுக்குக் காணிகளை வழங்க வேண்டும் என இந்த பேச்சுவார்த்தையில் தெரிவிக்கப்பட்டதோடு, அதனை நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளதுடன் மிக விரைவில் அவர்களுக்குக் காணிகளை வழங்குவதற்குத் தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுப்பதாகத் தோட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இராதாகிருஷ்ணன் எம்.பி விடுத்துள்ள விசேட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அண்மையில் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் காணிகளை வழங்குவது தொடர்பாகப் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டு அவர்களுக்கும் காணிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதனடிப்படையிலேயே, குறித்த தோட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் காணிகளைப் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு அது தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டு மிக விரைவில் அவர்களுக்கான காணிகள் பெற்றுக்கொடுக்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசு காலத்தில் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் வீடுகள் கட்டப்பட்டதை போல புதிய அரசாங்கமும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வர வேண்டும் எனவும், இந்த நடவடிக்கையை விரைவுபடுத்த வேண்டும் எனவும் அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**வவுனியாவில்**

# கட்டாக்காலி மாடுகளுக்கு அபராதம் விதிப்பு



**யதுர்ஷிகா**

வவுனியா வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளினால் நகரின் அழகு சீர்குலைவதுடன் போக்குவரத்துக்கும் பல்வேறு இடைஞ்சல்கள் ஏற்பட்டு வந்த நிலையில் செட்டி குளம் பிரதேச சபையினால் கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டு உரிமையாளர்களுக்கு அபராதம் விடப்படவுள்ளது.

கட்டாக்காலி மாடுகளினால் ஏற்படும் போக்குவரத்து விபத்துக்களைக் குறைக்கும் வகையிலும் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையில் இந்த மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பிடிக்கப்பட்ட கட்டாக்காலி மாடுகள் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை வளாகத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ளன.

மாட்டின் உரிமையாளர்கள் பிடிகூலி 1000 ரூபா தண்டப்பணம் 1000 ரூபா, ஏற்றியிறக்கல் 500 ரூபா, ஓர் நாள் பராமரிப்பு செலவு 250 ரூபா ஆகியவற்றினை செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் பராமரிப்பு செலவு நாளாந்தம் 250 ரூபா விதிக்கப்படுமெனப் பிரதேச சபை தெரிவித்துள்ளது.

# நானுஓயா புனித ரீட்டம்மாள் தேவாலயத்தில் நத்தார் ஆராதனை



**செ.திவாகரன்**

நானுஓயா பிரதான நகரில் பிரசித்திபெற்ற கிறிஸ்தவ ஆலயங்களில் ஒன்றாகக் கருதப்படும் புனித ரீட்டம்மாள் ஆலயத்தின் இயேசு பாலகனின் பிறப்பினை வரவேற்று விசேட ஆராதனைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டது. இந்நிகழ்வுகள் ஆலய அருட்தந்தை செபஸ்டியன் சற்குணராஜ் தலைமையில் இடம்பெற்றதுடன், திருப்பலியும் ஒப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

# புங்குடுதீவு பாடசாலைக்கு அருகில் குற்றச்செயல்கள்

## பொலிஸ் பாராமுகம் - மக்கள் விசனம்

**பு.கஜிந்தன்**

புங்குடுதீவு சித்தி விநாயகர் மகா வித்தியாலயத்திற்கு அருகாமையில் பல்வேறு குற்றச்செயல்கள் இடம்பெறுவதாகவும் இது குறித்து பொலிஸாருக்கு அறிவித்தல் வழங்கியும் அவர்கள் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த பகுதியில் திருட்டு மாடுகளை இறைச்சிக்காக வெட்டுதல், கசிப்பு உற்பத்தி மற்றும் வியாபாரம் என்பன இடம்பெறுகின்றன. இது குறித்து குறிகட்டுவானில் இயங்கும் உப பொலிஸ் நிலையத்திற்குப் பலதடவைகள் முறைப்பாடு செய்தும், அவர்கள் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை. பொலிஸாருக்கும், குற்றச் செயல்களைச் செய்பவர்களுக்கும் இடையே தொடர்புகள் காணப்படுகின்றதா என்ற சந்தேகமும் எழுகின்றது.

கசிப்பு வியாபாரத்தினால் மாணவர்களது கல்வி பாதிக்கப்படுகிறது. பிள்ளைகளைத் தனியே பாடசாலைக்கு அனுப்புவதற்குப் பயமாக உள்ளது. பெண்கள் வீதியில் தனியாக நடமாடுவதற்குப் பாதுகாப்பற்ற நிலைமை காணப்படுகிறது. எனவே இதற்கு உரிய அதிகாரிகள் ஒரு சிறந்த தீர்வு வழங்கு வேண்டும் என்றனர்.

# இராணுவ காணிகளை அன்றி சொந்தக் காணிகளையே விடுவிக்க கோருகின்றனர்

## வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன்



**பு.கஜிந்தன்**

இராணுவத்தினரின் காணிகளை வடக்கு மக்கள் விடுவிக்கக் கோரவில்லை. சொந்தக் காணிகளையே விடுவிக்கக் கோருகின்றார்கள் என்ற தெளிவுபடுத்தலைத் தென்னிலங்கை மக்களுக்கு எடுத்துச் சொல்லுமாறு என்னைச் சந்தித்த தென்னிலங்கையைச் சேர்ந்த சிவில் சமூகக் குழுக்களிடம் தெரிவித்தாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் குறிப்பிட்டார்.

வயாவிளான், பலாலி தெற்கு, பலாலி கிழக்கு மக்களின் அழைப்பின் பேரில் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் விடுவிக்கப்பட்ட காணிகளில் விவசாய நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடலும், பூனையன்காடு இந்து மயானத்தில் மர நடுகையும் நேற்று காலை (25) வயாவியானில் நடைபெற்றது.

அந்தப் பிரதேச மக்கள் சார்பில் கருத்துத் தெரிவித்த உ.சந்திரகுமாரன்,

வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் இந்த மண்ணை நேசிக்கும் ஒருவர். நாம் தற்போது எடுத்தோம் கவிழ்த்தோம் எனச் செயற்பட முடியாது. கட்டம் கட்டமாக எமது காணிகளை விடுவிக்க ஆளுநர் நடவடிக்கை எடுப்பார் என நாம் முழுமையாக நம்புகின்றோம் என்றார்.

வடக்கு ஆளுநர்,

2015ஆம் ஆண்டுக் காலத்தில் யாழ். மாவட்டச் செயலராக நான் இருந்தபோது படிப்படியாகப் பல பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டன. விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் குடியமரவில்லை எனப் பாதுகாப்புத் தரப்பினர் எங்களுக்குத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் வீட்டுத் திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்தினோம். மக்களும் எதிர்பார்த்ததைப் போன்று மீள் குடியமர்ந்தார்கள்.

2018ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தைத் தொடர்ந்து காணி விடுவிப்புக்கள் நடைபெறவில்லை. இந்த ஆண்டு சிறிய அளவில் காணிகள் விடுவிக்கப்பட்டிருக்கின்றன. விடுவிக்கப்பட்ட காணிகளை விவசாய பூமியாக மாற்றுவதுதான் நீங்கள் எங்களுக்குச் செய்யும் உதவி.

இந்த அரசாங்கத்தின் காலத்தில் படிப்படியாகக் காணிகளை விடுவிக்க முடியும் என நம்புகின்றோம்.

இங்குக் காணிகள், வீதிகள் விடுவிக்கப்பட்டதும் தென்னிலங்கையிலிருந்து சில தேவையற்ற கருத்துக்கள் வெளியிடப்பட்டு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. தென்னிலங்கை மக்களுக்கு இங்கு நடைபெறுவது என்ன என்ற உண்மையைத் தெளிவுபடுத்துமாறு என்னைச் சந்தித்த தென்னிலங்கையைச் சேர்ந்த சிவில் சமூகக் குழுக்களிடம் தெரிவித்துள்ளேன் என்றார்.

# சம்பா நெற்செய்கைக்கு இனம் தெரியாத நோய்த்தாக்கம்



கிளிநொச்சி புளியம்பொக்கனை கமநலசேவை பிரிவில் இனம் காண முடியாத நோய் தாக்கத்தின் காரணமாக ஐந்து ஏக்கர் சம்பா நெற்செய்கை முற்று முழுதாக அழிவடைந்து உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கிளிநொச்சி புளியம்பொக்கனை கமநலசேவை பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கனை சின்னவரணி பகுதியில் பெரும்போக சம்பா நெற்செய்கையில் ஈடுபட்டிருந்த விவசாயி ஒருவரது நெற் செய்கையில் 70 நாட்கள் கடந்த நிலையில் இத்தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இனங்காண முடியாத நோய் தாக்கம் காரணமாக ஐந்து ஏக்கர் அளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த சம்பா நெற் செய்கை முற்று முழுதாக அழிந்து நீரில் கரைந்து உள்ளது.

இது தொடர்பாக எமது பகுதி விவசாய அமைப்புகள் மற்றும் கமநல சேவை திணைக்களத்தினர் வருகை தந்து எமது நெற்செய்கைக்கு ஏற்பட்டுள்ள அழிவுக்கான காரணத்தினை கண்டறிய வேண்டும் எனவும், இந்நிலை தொடருமாயின் இனிவரும் காலங்களில் நெற்செய்கை மேற்கொள்வது மிகவும் கடினமாக அமையும் எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மத்திய மாகாண கலாசார விருது விழா






**எம்.ஏ.அமீனுல்லா**

மத்திய மாகாணத்தின் கலாசாரப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதுடன் குறு நாடகம், சிறுவர் நாடகம் மற்றும் திரைப்படத்துறைகளில் உள்ளவர்களின் திறமைகளை மதிப்பிட்டு, அவர்களை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திற் கொண்டு செல்லும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மத்திய மாகாண விழா கண்டி, பல்லேகலையிலுள்ள மத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (24) நடைபெற்றது.

மத்திய மாகாண முதல் அமைச்சு கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளருமான திருமதி மதுபானி பியசேன தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் பல போட்டி பிரிவுகளின் கீழ் வெற்றி பெற்ற திறமையான கலைஞர்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அவர்களுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# துப்பாக்கி, தோட்டாக்களுடன் கடற்படை வீரர் தலைமறைவு

திருகோணமலை கடற்படைத் தளத்தில் பணியாற்றும் கடற்படை வீரர் T-56 துப்பாக்கி மற்றும் முப்பது தோட்டாக்கள் அடங்கிய மகசீனுடன் காணாமல் போயுள்ளதாக வரக்காபொல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை கடற்படைத் தளத்திலிருந்து சரக்குகளை கடற்படை லொறியில் ஏற்றிக் கொண்டு கொழும்பு நோக்கி வந்துக் கொண்டிருந்த கடற்படைச் சிப்பாய் ஒருவரே காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த லொறியின் பாதுகாப்புக்கு வந்த திருகோணமலை கடற்படை முகாமைச் சேர்ந்த சிப்பாயே காணமல் போனவராவார்.

இந்த லொறி நேற்று முன்தினம் (24) இரவு கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த போது, வரக்காபொல வாரயகொட பகுதியில், குறித்த கடற்படை சிப்பாய், தனது சகோதரர் வீட்டில் இருந்து இரவு உணவு கொண்டு வந்ததாகக் கூறி லொறியில் இருந்து இறங்கிய போனவர், திரும்பி வரவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் லொறியில் இருந்து இறங்கி திரும்பி வராத நிலையில் வாகனத்தின் சாரதியாக இருந்த கடற்படை வீரர் சம்பவம் தொடர்பில் வரக்காபொல பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

## குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்

### உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன்



சென்னையில் கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த 21ம் திகதி மாணவி ஒருவர் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார்.

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவத்தில் குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர் என உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் எக்ஸ் சமூக வலைத் தளத்தில் "கிண்டி பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டதாக புகார் அளித்துள்ளார்.

பொலிஸார் அச் சம்பவம் குறித்து விசாரித்து வருகின்றனர். இது போன்ற சம்பவம் மீண்டும் நிகழாமல் இருக்க பல்கலைக்கழக அளவில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்து உரிய முடிவுகள் எடுக்கப்படும். தனிப்பட்ட ஒரு மாணவி பாதிக்கப்பட்டுள்ள இச்சம்பவத்தை அரசியல் ஆக்க விரும்புகிறவர்கள். கடந்த கால ஆட்சியில் பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் அன்றைய ஆட்சியாளர்களின் அழுத்தத்தால் பொலிஸ் நிலையத்தில் புகார் அளிக்கக் கூட பாதிக்கப்பட்டவர்கள் பயந்தனர் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். தி.மு.க ஆட்சியில் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வெகு விரைவில் குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்" என தெரிவித்துள்ளார்.

## பனிப்பொழிவால் ஹிமாச்சலில் மூடப்பட்ட 223 வீதிகள் – நால்வர் உயிரிழப்பு

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டுக்காக சிம்லா, மணாலிக்கு சுற்றுலாப் பயணிகள் குவிந்ததால், அப்பகுதியில் நிலவிய கடும் பனிப்பொழிவு காரணமாக குறைந்தது 4 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், ஹிமாச்சலில் மூன்று தேசிய நெடுஞ்சாலைகள் உட்பட குறைந்தது 223 சாலைகள் மூடப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சிம்லா, குலு, மண்டி, சம்பா மற்றும் சிர்மௌர் மாவட்டங்களுடன் கின்னவுர், லாஹவுல் மற்றும் ஸ்பிதி ஆகிய இடங்களில் கடும் பனிப்பொழிவு காணப்பட்டது. இருப்பினும், பனி நிறைந்த மலைவாசஸ்தலங்களுக்குச் செல்லும் வழியில் மோசமான வானிலை மற்றும் ஆபத்தான சூழ்நிலைகள் சுற்றுலாப் பயணிகளின் பயணத்தை தடுக்கவில்லை. இதனிடையே, திங்கட்கிழமை (23) அடல் சுரங்கப்பாதையில் சிக்கித் தவித்த சுமார் 500 வாகனங்களில் சுற்றுலாப் பயணிகளை மாநில பேரிடர் மேலாண்மைக் குழுவினர் மீட்டனர். பல வாகனங்கள் வீதியிலிந்து சறுக்கி விபத்துக்குள்ளானதால் குறைந்தது நான்கு பேர் இறந்துள்ளனர் மற்றும் பலர்



காயமடைந்துள்ளனர். சிம்லாவில் 145 வீதிகளும், குலுவில் 25 வீதிகளும், மண்டி மாவட்டங்களில் 20 வீதிகளும் மூடப்பட்டன. 356 மின்மாற்றி பழுதடைந்ததால் பல பகுதிகளில் மின்சாரம் தடைபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## 'கேல் ரத்னா' விருது சர்ச்சை - மனு பாகர் விளக்கம்



"உயரிய 'கேல் ரத்னா' விருது விடயத்தில் எனது தரப்பில் தவறு நடந்துள்ளது" என மனு பாகர் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு சார்பில் விளையாட்டின் உயரிய 'கேல் ரத்னா' விருது வழங்கப்படுகிறது. 2024ம் ஆண்டுக்கான பரிந்துரை பட்டியலில் பாரிஸ் ஒலிம்பிக்கில் வெண்கலம் பெற்றுத்தந்த இந்திய ஹொக்கி அணி கேப்டன் ஹர்மன்பிரீத் சிங், உயரம் தாண்டுதலில் வென்ற வீர் பிரவீன் குமார் (பாராஒலிம்பிக்கில் தங்கம்) ஆகியோரின் பெயர் இடம் பெற்றுள்ளது. அர்ஜுனா விருதுக்கு 30 பேர் பரிந்துரைக்கப்பட்டனர். இதுகுறித்த இறுதி அறிவிப்பு முறைப்படி வெளியாகவில்லை. இதனிடையே பாரிஸ் ஒலிம்பிக்கில் 2 பதக்கம் வென்று வரலாறு படைத்த துப்பாக்கி சுடுதல் வீராங்கனை மனு பாகர் பெயர், கேல் ரத்னா பட்டியலில் இடம் பெறவில்லை என சர்ச்சை எழும்பியது. "மனு பாகர் விண்ணப்பிக்க வில்லை" என மத்திய விளையாட்டு அமைச்சகம் தெரிவித்தது.

மனு பாகர் தந்தை ராம் கிஷன் "மனு பாகரை துப்பாக்கிசுடுதல் வீராங்கனையாக உருவாக்கியதற்கு வருத்தப்படுகிறேன். இவரை கிரிக்கெட் வீராங்கனையாக கொண்டு வந்திருக்க வேண்டும்" என்றார்.

இதுகுறித்து மனு பாகர், "தேசத்திற்காக விளையாடி பெருமை சேர்ப்பது மட்டும் தான் எனது வேலை. இதற்காக கிடைக்கும் விருதுகளும், அங்கீகாரமும் தொடர்ந்து சிறப்பாக செயல்பட எனக்குத் தூண்டுகோலாக இருக்கும். ஆனால் விருதுகளை பெறுவது மட்டும் எனது இலக்கு அல்ல. உயரிய 'கேல் ரத்னா' விருதுக்கு பரிந்துரை செய்யப்படுவதில், எனது தரப்பில் ஏதோ தவறு நடந்திருக்கலாம். விரைவில் இது சரி செய்யப்படும். மற்றபடி விருதுகளை பொருட்படுத்தாமல், தேசத்திற்காக தொடர்ந்து பதக்கங்கள் வெல்ல முயற்சிப்பேன். இவ்விடயத்தில் தவறாக எதுவும் தெரிவிக்க வேண்டாம் என அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன் என மனு பாகர் தெரிவித்தார்.




## ஆழ்துளை கிணற்றில் சிக்கிய 3 வயது சிறுமி



ராஜஸ்தான் மாநிலம் கோட்புட்லியில் (Kotputli) 700 அடி ஆழமுள்ள ஆழ்துளை கிணற்றில் விழுந்த மூன்று வயது சிறுமியை மீட்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மாநில பேரிடர் மீட்புப் படை (SDRF) மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படை (NDRF) குழுக்கள் 48 மணி நேரத்திற்கும் மேலாக சிறுமி சேத்னாவை மீட்கும் முயற்சியை முன்னெடுத்துள்ளனர். முதலில் தலா 10 அடி கொண்ட 15 இரும்பு கம்பிகளை ஒன்றன் பின் ஒன்றாக வைத்து சிறுமியை மீட்கும் முயற்சிகளை மீட்பு குழுவினர் மேற்கொண்டனர். எனினும் அந்த முயற்சி பலனளிக்கவில்லை.

அவர்களின் ஆரம்ப திட்டங்கள் தோல்வியடைந்ததையடுத்து, அதிகாரிகள் துழையிடும் இயந்திரங்களைப் பயன்படுத்தவும், செவ்வாய்க்கிழமை எலி சுரங்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி குழி தோண்டி சிறுமியை மீட்கவும் முடிவு செய்தனர். இதனிடையே, சிறுமிக்கு ஒட்சிசன் வழங்குவதற்காக ஆழ்துளை கிணற்றில் ஒட்சிசன் குழாய் இறக்கப்பட்டுள்ளது. சம்பவம் நடந்த இடத்தில் நான்கு அம்புலன்ஸ்களும் நிறுத்தப்பட்டுள்ளன.

கிராத்பூரில் உள்ள பதியாலி கிதானியில் வசிக்கும் சிறுமி, திங்கட்கிழமை (23) பிற்பகல் 2.00 மணியளவில் விளையாடிக் கொண்டிருந்தபோது ஆழ்துளை கிணற்றில் விழுந்தார். முதலில் அவர், சுமார் 150 அடி ஆழத்தில் சிக்கிக் கொண்டார். ஒரு தற்காலிக கருவியைப் பயன்படுத்தி, மீட்பு பணியாளர்கள் சிறுமியை 30 அடி வரை மட்டுமே இழுக்க முடிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேலுநாச்சியாருக்கு தவெக தலைவர் விஜய் மரியாதை



ராணி வேலு நாச்சியாரின் நினைவு தினத்தையொட்டி சென்னை பனையூரில் உள்ள தவெக தலைமை அலுவலகத்தில் அவரது உருவப்படத்திற்கு மாலை அணிவித்தும், மலர்தூவியும் விஜய் மரியாதை செலுத்தினார். நல்லிணக்கத்தோடு நாடாண்ட தமிழச்சி என வேலுநாச்சியாருக்கு விஜய் புகழாரம் சூட்டியுள்ளார்.

ஆங்கிலேயர்களை எதிர்த்து போரிட்டு முதன் முதலில் சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பித்து மீண்டும் தனது நாட்டை பிடித்த முதல் பெண் போராளி வீரமங்கை வேலுநாச்சியாரின் 228 ஆவது நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது. இதன்போது சிவகங்கை அரண்மனை வாசல் முன்பு அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் குருபூஜை விழா அனுசரிக்கப்பட்டது. ராணி வேலு நாச்சியாரின் நினைவு தினத்தையொட்டியே சென்னை பனையூரில் உள்ள தவெக தலைமை அலுவலகத்தில் அவரது உருவப்படத்திற்கு மாலை அணிவித்தும், மலர்தூவியும் விஜய் மரியாதை செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து விஜய் வெளியிட்டுள்ள எக்ஸ் சமூக வலைத்தளப்பதிவில், "மண்ணைக் காக்க வாளேந்திப் போர்க்களம் புகுந்த வீரப் புரட்சியாளர், இந்தியாவின் முதல் விடுதலைப் பெண் போராளி, அனைத்துச் சமூகத்தினரோடும் நல்லிணக்கத்தோடு நாடாண்ட தமிழச்சி, எம் கழகத்தின் கொள்கைத் தலைவர், வீரமங்கை, ராணி வேலு நாச்சியார் அவர்களின் நினைவு தினத்தையொட்டி, எமது அலுவலகத்தில் அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினேன்" என தெரிவித்துள்ளார்.

## இந்திய ரூபாயின் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சி

அமெரிக்க டொலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு வரலாறு காணாத வகையில் திங்கட்கிழமையன்று(23) 85.12 ஆக சரிந்தது.

தொடர்ந்து செவ்வாய்க்கிழமை 1 டொலரின் மதிப்பு இந்திய ரூபாய் 85.18ஆக இருந்த நிலையில், நேற்று மேலும் சரிந்து இந்திய ரூபாய் 85.41ஆகக் காணப்பட்டது.

தொடர்ச்சியாக 6 ஆவது முறையாக இந்த சரிவு ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து கச்சா எண்ணெய் விலை உயர்வு, ரூபாயின் மதிப்பை வீழ்ச்சியடையச் செய்து வருகிறது.

அமெரிக்கக் கடன் பத்திரங்கள் அதிகரிப்பு மற்றும் இறக்குமதியாளர்களிடமிருந்து வலுவான டொலர் தேவை ஆகியவை இந்த வீழ்ச்சிக்குக் காரணங்களாகும். மேலும் மாத இறுதியில் டொலரின் தேவை அதிகரித்தது மற்றும் அமெரிக்காவில் டொனால்ட் ட்ரம்ப்



நிர்வாகத்தின் இறக்குமதி வரி பற்றிய அச்சமும் இதற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு ஆறு மாதங்களில் வரலாறு காணாத அளவுக்குக் குறைந்துள்ளது. எதிர்காலத்தில் நிலையான ரூபாய் மதிப்பு சரிய ஆரம்பிக்கலாம் என வர்த்தகர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.



## ஒடிசாவில் புலித்தோல் கடத்திய 11 பேர் வனத்துறையினரால் கைது

ஒடிசா மாநிலத்தில் புலித்தோல் கடத்திய 11 பேரை பாலசோர் மாவட்ட வனத்துறை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

பாலசோர் மாவட்டம் சோரோ நகரில் புலித்தோல் கடத்திய 11 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களிடமிருந்து ஒரு புலித்தோல் கைப்பற்றப்பட்டுள்ளது. இதுகுறித்து பாலசோர் வனத்துறை அதிகாரி குஷ்வந்த் சிங், வனவிலங்குகளின் பாகங்கள் சந்திப்பூர் காட்டுப்பகுதியில் விற்கப்படுவதாக இரகசியத் தகவல் கிடைத்தாகவும், அதன் அடிப்படையில் பாலசோர் மற்றும் மயூர்பஞ்சு ஆகிய இரு மாவட்டங்களில் வனத்துறை அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை(22) அந்த குழுவினர் நடத்திய சோதனையில் 4 பேர் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து ஒரு புலித்தோலும் கைப்பற்றப்பட்டது. அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையின் அடிப்படையில் மேலும் 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட 7 பேரும் சந்திப்பூர் வனப்பகுதிக்கு அழைத்து செல்லப்பட்டு விசாரணையில் அவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் கடந்த திங்கட்கிழமையன்று (23) மேலும் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அவர்களிடமிருந்து ஒரு நாட்டுத் துப்பாக்கியும், 8 தொலை பேசிகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இருப்பினும் அந்த புலித்தோல் அவர்களிடம் எப்படி வந்தது? அது ஒடிசாவில் வேட்டையாடப்பட்டதா? என இன்னும் தெரிவிக்கப்படவில்லை.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட 11 பேரின் மீதும் இந்திய வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் 1972 கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.




# கிறிஸ்மஸ் மரம் எரிப்பு; சிரியாவில் போராட்டம்

சிரியாவில் கிறிஸ்மஸ் மரத்தை எரித்ததற்கு எதிராக போராட்டங்கள் வெடித்துள்ளதுடன், சிறுபான்மையினரை பாதுகாக்க புதிய இஸ்லாமிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மத்திய சிரியாவில் கிறிஸ்தவர்கள் அதிகம் வசிக்கும் நகரமான சுகைலாபியாவின் (Suqaylabiyah) பிரதான சதுக்கத்தில் கிறிஸ்துமஸ் மரம் தீப்பிடித்து எரிவதை சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட காணொளி காட்டுகிறது. இதேவேளை, சம்பவம் தொடர்பில் வெளிநாட்டு போராளிகள் கைது செய்யப்பட்டதாக ஜனாதிபதி பஷர் அல்-ஆஸாத்தை வீழ்த்திய எழுச்சிக்கு தலைமை தாங்கிய முக்கிய இஸ்லாமியப் பிரிவான ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் (உவுஞ) தெரிவித்துள்ளது. அதேநேரம், சிரியாவில் மத மற்றும் இன சிறுபான்மையினரின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப் பாதுகாப்பதாக ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் பிரதிநிதிகள் உறுதியளித்துள்ளனர். கிறிஸ்மஸ் தினத்தைக் கொண்டாட சிரியாவில் உள்ள கிறிஸ்தவர்கள் தயாராவதற்கு முந்தைய நாள் இரவு, முகமூடி அணிந்தவர்கள்





கிறிஸ்துமஸ் மரத்தில் மர்மமான திரவத்தை ஊற்றுவதை சமூக ஊடகங்களில் காண முடிந்தது. அவர்கள் பற்றி எரிந்த தீயை அணைக்க முயன்றார்களா அல்லது அது கொழுந்து விட்டு எரிவதற்கு வழிவகுத்தார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை. எவ்வாறெனினும், கிறிஸ்மஸ் மர தீ வைப்புக்கு எதிராக செவ்வாய்க்கிழமை(24) தலைநகர் டமாஸ்கஸின் சில பகுதிகள் உட்பட பல தெருக்களில் எதிர்ப்பாளர்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். டமாஸ்க

ஸின் கஸ்ஸா (Kassa)சுற்று ப்புறத்தில் சிலர் சிரியாவிலுள்ள வெளிநாட்டு போராளிகளுக்கு எதிராக கோஷமிட்டனர். டமாஸ்கஸின் பாப் டூமா சுற்றுப்புறத்தில், எதிர்ப்பாளர்கள் சிலுவை மற்றும் சிரியக் கொடிகளை ஏந்தி, ”எங்கள் சிலுவைக்காக எங்கள் ஆன்மாக்களை தியாகம் செய்வோம்” என்று கோஷமிட்டனர்.

குர்துகள், ஆர்மேனியர்கள், அசிரியர்கள், கிறிஸ்தவர்கள், ட்ரூஸ், அலவைட் ஷியா மற்றும் அரபு சுன்னிகள் உட்பட பல இன மற்றும் மத குழுக்களின் தாயகமாக சிரியா உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# விண்வெளியில் கிறிஸ்மஸ் கொண்டாடிய சுனிதா வில்லியம்ஸ் குழு

சர்வதேச விண்வெளி மையத்தில் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் அவரது குழுவினர் கிறிஸ்மஸ் கொண்டாடிய வீடியோவை நாசா வெளியிட்டுள்ளது.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் 6 மாதங்களுக்கு மேல் தங்கி உள்ள இந்திய வம்சாவளியை சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் மற்றும் அவரது குழுவினர் பூமியில் இருக்கும் மக்களுக்கு கிறிஸ்மஸ் வாழ்த்து செய்தியை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் விண்வெளியில் கிறிஸ்மஸ் கொண்டாடும் வீடியோ பதிவு ஒன்றை நாசா வெளியிட்டுள்ளது.

பூமியில் உள்ள அனைவருக்கும், சர்வதேச விண்வெளி வீரர்களான எங்களின் கிறிஸ்மஸ் வாழ்த்துகள். சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு வரவேற்கிறோம். கிறிஸ்மஸ் விடுமுறைக்கு நாங்கள் தயாராகிக்கொண்டிருக்கிறோம். நாங்கள் 7 பேர் இங்கே இருக்கிறோம். நாங்கள் ஒன்றாக இணைந்து கிறிஸ்மஸ் கொண்டாடுகிறோம் என அந்த வீடியோவில் கூறப்பட்டுள்ளது.



# இஸ்ரேல் மீதான தாக்குதல் நியாயமானது; ஈரான்

கடந்த ஜுலை மாதம் தெஹ்ரானில் ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே படுகொலை செய்யப்பட்டதன் பின்னணியில் இஸ்ரேல் இருப்பதாக ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து ஐ.நா.வை கண்டிக்குமாறு ஈரான் அழைப்பு விடுத்துள்ளது.



இது தொடர்பில் ஈரானிய தூதுவர் அமீர் சயீத் இரவானி (Amir Saeid Iravani), ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குடெரெஸுக்கு எழுதிய கடிதத்தில்,

இந்த வெட்கக்கேடான செயல் பயங்கரவாதத்தில் இஸ்ரேலின் பங்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது என்று சுட்டிக்காட்டியதுடன், 2024 ஒக்டோபர் 1 அன்று இஸ்ரேலுக்கு எதிரான ஈரானின் ஏவுகணைத் தாக்குதலை சட்டப்பூர்வமாக்கியது என்று வாதிட்டார். மேலும், இஸ்ரேல் (சியோனிச) ஆட்சி உலக அமைதிக்கு ஒரு தீவிர அச்சுறுத்தலாக உள்ளது, இது நிறுத்தப்பட வேண்டும் என்றும் அக் கடிதத்தில் அடிக்கோடிட்டுக் காட்டினார்.

அத்துடன், இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸால் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளப்பட்ட இந்த படுகொலை ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான கொந்தளிப்பான உறவில் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தைக் குறிக்கிறது என்றார்.

ஹமாஸின் முக்கிய பிரமுகரும் அதன் தலைவருமான ஹனியே, தெஹ்ரானுக்கு விஜயம் செய்து கொண்டிருந்தபோது கடந்த ஜுலை மாதம் நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்டார். 62 வயதான ஹனியே, ஹமாஸின் ஒட்டுமொத்தத் தலைவராக பரவலாகக் கருதப்பட்டார், காஸா பகுதியில் போர் நிறுத்தத்தை எட்டுவதற்கான பேச்சுவார்த்தைகளில் முக்கிய பங்கு வகித்தார்.

இந்த நிலையில் ஐ.நா.வுக்கு ஈரான் எழுதிய கடிதம், இஸ்ரேல் பிராந்தியத்தை சீர்குலைப்பதாக குற்றம் சாட்டியதுடன், இஸ்ரேலை பொறுப்புக்கூற வைக்கும் பாதுகாப்பு சபையின் பொறுப்பை எச்சரித்தது.

ஹனியேவின் படுகொலையைத் தொடர்ந்து, செப்டம்பர் 27 அன்று பெய்ரூட்டில் ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லாஹ் மற்றும் ஒக்டோபர் 7 அன்று காசாவில் ஹனியேவின் வாரிசான யாஹ்யா சின்வார் உட்பட பல உயர்மட்ட கொலைகளை இஸ்ரேல் நடத்தியதாகக் கூறப்படுகிறது.

# ஜோ பைடனுக்கு, ட்ரம்ப் கண்டனம்

ஆமெரிக்காவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள 40 கைதிகளில் 37 பேருக்கு ஆயுள் தண்டனையாக குறைத்து உத்தரவு பிறப்பித்துள்ள ஜோ பைடனின் நடவடிக்கைக்கு டொனால்ட் ட்ரம்ப் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். குற்றவாளிகள் செய்த கொலைகளை வன்மையாக கண்டிக்கிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் அமெரிக்க நீதிமன்றங்களில் பல்வேறு குற்ற வழக்குகள் தொடர்பாக மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள 40 கைதிகளில் 37 பேருக்கு ஆயுள் தண்டனையாக குறைத்து உத்தரவு பிறப்பித்துள்ளார். இதற்கு டொனால்ட் ட்ரம்ப் எதிர்ப்பு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக அவரின் எக்ஸ் சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்ட பதிவில், குற்றவாளிகள் செய்த கொலைகளை வன்மையாக கண்டிக்கிறேன். அவர்களால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருடன் வேதனையை பகிர்ந்து கொள்கிறேன். ஜோ பைடன் நமது நாட்டில் மிக மோசமான கொலையாளிகள் 37 பேரின் மரண தண்டனையை குறைத்துள்ளார் . ஒவ்வொருவரின் குற்றச்செயல்களையும் கேட்டால் அவர் ஏன் இதை செய்தார் என நீங்கள் கேள்வி எழுப்புவீர்கள். எந்த எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் வான்வழித் தாக்குதல்: 15 பேர் பலி

பாகிஸ்தான் ஜெட் விமானங்கள் ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்து குண்டுகளை வீசியதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 15 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தான் இராணுவத்தினர் மீது அண்டை நாடான ஆப்கானிஸ்தானில் இருந்து கொண்டு தெக்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தான் அமைப்பினர் சமீபகாலமாக தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்த அமைப்பினருக்கு ஆப்கானிஸ்தானில் ஆளும் தலிபான்கள் ஆதரவளித்து வருவதாக பாகிஸ்தான் குற்றம் சாட்டி வருகிறது. இந்த குற்றச்சாட்டை தலிபான் அரசு மறுத்து வருகிறது. இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை இரவு எல்லையையொட்டி ஆப்கானிஸ்தான் பத்திகா மாகாணம் பர்மால் மாவட்டத்தில் உள்ள லேமன் உள்ளிட்ட 7 கிராமங்கள் மீது பாகிஸ்தான் அதிரடி வான் வழித் தாக்குதல் நடாத்தியது.



பாகிஸ்தான் விமான படைக்கு சொந்தமான ஜெட் விமானங்கள் ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்து சரமாரியாக குண்டுகளை வீசியது. இந்த குண்டு வீச்சில் பர்மால் முர்க்பஜார் கிராமம் முற்றிலும் உருக்குலைந்தது. வீடுகள் கடும் சேதம் அடைந்ததுடன் பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட 15 பேர் உயிரிழந்தனர். இவர்களில் 5 பேர் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஏராளமானவர்கள் படுகாயம் அடைந்ததுடன் பலரைக் காணவில்லை எனவும் படுகாயம் அடைந்தவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானின் இந்த செயலுக்கு ஆப்கானிஸ்தான் தலிபான் அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் பொது மக்களை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது கோழைத்தனமான தாக்குதல் செயல். ஒருதலைபட்ச வான்வழித் தாக்குதல். இந்த தாக்குதலில் இறந்தவர்கள் பெரும்பாலானவர்கள் வஜிகிஸ்தான் பகுதியை சேர்ந்த அகதிகள் ஆவார்கள். பலரை காணவில்லை என்பதனால் பலி எண்ணிக்கை உயரலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் பொதுமக்களின் நிலங்கள், இறையாண்மை ஆகியவற்றை பாதுகாப்பது தங்களின் கடமையாகும். இந்த தாக்குதலுக்கு தக்க பதிலடி கொடுப்போம் எனக் கூறப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் மீது நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலை பாகிஸ்தான் இன்னும் உறுதிபடுத்தவில்லை.

# ஜப்பானில் சிரிப்புத் திருவிழா

ஜப்பானில் லிபரல் டெமாக்ரடிக் கட்சி தலைமையிலான ஆட்சி நடைபெற்று வருகிறது. அந்நாட்டின் பிரதமராக



ஷிகெரு இஷிபா (வயது 67) விளங்குகிறார். இந்த நிலையில் உள்ளூர்வாசிகளின் உடல், மன நலனைக் காக்கும் பொருட்டு ஒருநாளுக்கு ஒருமுறையாவது அவர்கள் சிரித்திட செய்யும் வகையில் புதிய சட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதத்தின் எட்டாவது நாள், “சிரிப்பின் மூலம் ஆரோக்கியம் மேம்படும் நாள்” எனக் கொண்டாடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகமாகச் சிரிப்பவர்கள் உடல் ஆரோக்கியத்துடன் நீண்ட நாள் வாழ்வதாக யமகட்டா பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்டது. மன இறுக்கத்தைச் சிரிப்புப் பயிற்சி குறைப்பதுடன் இதயப் பாதிப்பு உள்ளிட்ட தீவிரப் பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# ஹெய்ட்டி வைத்தியசாலையில் துப்பாக்கிச் சூடு; மூவர் உயிரிழப்பு

ஹெய்ட்டியில், நாட்டின் மிகப்பெரிய பொது வைத்தியசாலையை மீண்டும் திறப்பதை அறிவிக்கும் மாநாட்டின் போது ஊடகவியலாளர்கள், பொலிஸார் மற்றும் வைத்திய ஊழியர்கள் மீது ஆயுதமேந்திய நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இந்த துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது மூன்று பேர் கொல்லப்பட்டனர்.

தலைநகர் போர்ட்-ஓ-பிரின்ஸில் உள்ள பொது வைத்தியசாலையில் செவ்வாய்க்கிழமை (24) நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளனர். ஒன்லைனில் வெளியிடப்பட்ட படங்கள் கட்டிடத்திற்குள் பலர் காயமடைந்தும் உயிரிழந்திருப்பதையும் வெளிக்காட்டுகின்றது. துப்பாக்கிச் சூடு நடத்தப்படும் போது, ஹெய்ட்டியின் சுகாதார அமைச்சர் லோர்தே பிளெமாவின் வருகைக்காக ஊடகவியலாளர்கள் காத்திருந்தனர். ஹெய்ட்டியில் கடந்த ஏப்ரலில் புதிய இடைக்கால அரசாங்கம் நிறுவப்பட்ட போதிலும், ஆறு மாதங்களுக்கு முன்னர் கென்ய பொலிஸ் அதிகாரிகள் தலைமையிலான சர்வதேசப் படை நிலைநிறுத்தப்பட்ட போதிலும், நாட்டு மக்கள் தாங்க முடியாத அளவிலான கும்பல் வன்முறைகளால் தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளனர்.

# ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண அட்டவணை



ஐ.சி.சி., சம்பியன்ஸ் கிண்ண போட்டிகள், 2025 பெப்ரவரி. 19 முதல் மார்ச் 9 வரை பாகிஸ்தானில் நடைபெறவுள்ளது. இதில் நடப்பு சம்பியன் பாகிஸ்தான், இந்தியா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா உட்பட, தரவரிசையில் “முதல்-8“ அணிகள் பங்கேற்கின்றன. இவை இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு காரணங்களுக்காக இந்திய அணி, பாகிஸ்தான் செல்ல மறுத்தது. இதனால் இந்திய அணி விளையாடும் லீக் போட்டிகள் மட்டும் துபாயில் நடைபெறவுள்ளன.

இதற்கான அட்டவணை நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. இந்திய அணி “ஏ“ பிரிவிலும் பாகிஸ்தான், பங்களாதேஷ், நியூசிலாந்து அணிகளும் அதில் அடங்கியுள்ளன. “பி“ பிரிவில் ஆப்கானிஸ்தான், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, தென்னாரிக்க அணிகள் அங்கம் வகிக்கின்றன.

அரையிறுதி -இறுதி போட்டிகள்

லீக் சுற்றில் ஒவ்வொரு பிரிவிலும் முதலிரண்டு இடம்பிடிக்கும் அணிகள், வரும் மார்ச் 4, 5ல் நடக்கும் அரையிறுதியில் விளையாடும். பைனல் மார்ச் 9ல் பாகிஸ்தானின் லாகூரில் நடக்கும். ஒருவேளை இந்திய அணி அரை யிறுதி, இறுதிக்கு முன்னே றினால், போட்டிகள் துபாயில் நடக்கும்.

## ICC Men's Champions Trophy 2025

19 Feb – பாகிஸ்தான் V நியூசிலாந்து, நெசனல் ஸ்டேடியம், கராச்சி
20 Feb – பங்களாதேஷ் V இந்தியா, டுபாய் சர்வதேச கிரிக்கெட் அரங்கம் டுபாய்
21 Feb – ஆப்கானிஷ்தான் V தென்னாரிக்கா, நெசனல் ஸ்டேடியம், கராச்சி
22 Feb – அவுஸ்திரேலியா V இங்கிலாந்து, கடாபி அரங்கம் , லாவூர்
23 Feb – பாகிஸ்தான் V இந்தியா, டுபாய் சர்வதேச கிரிக்கெட் அரங்கம் டுபாய்
24 குநடி - பங்களாதேஷ் V நியூசிலாந்து, ராவல்பிண்டி கிரிக்கெட் அரங்கம் ராவல்பிண்டி
25 Feb – அவுஸ்திரேலியா V தென்னாரிக்கா, ராவல்பிண்டி கிரிக்கெட் அரங்கம் ராவல்பிண்டி
26 Feb – ஆப்கானிஷ்தான் V இங்கிலாந்து, கடாபி அரங்கம் , லாவூர்
27 Feb– பாகிஸ்தான் V - பங்களாதேஷ், ராவல்பிண்டி கிரிக்கெட் அரங்கம் ராவல்பிண்டி
28 Feb – ஆப்கானிஷ்தான் எ அவுஸ்திரேலியா, கடாபி அரங்கம் , லாவூர்
1 Mar – தென்னாரிக்கா V இங்கிலாந்து, நெசனல் அரங்கம், கராச்சி
2 Mar – நியூசிலாந்து V இந்தியா, டுபாய் சர்வதேச கிரிக்கெட் அரங்கம் டுபாய்
4 Mar – அரையிறுதி- 1, டுபாய் சர்வதேச கிரிக்கெட் அரங்கம் டுபாய்
5 Mar – அரையிறுதிட 2, கடாபி அரங்கம் , லாவூர்
9 Mar – இறுதிப் போட்டிட - கடாபி அரங்கம் , லாவூர்
All matches start at 14h00 Pakistan Standard Time
அனைத்து போட்டிகளும் பாகிஸ்தான் நேரப்படி 14:00 மணிக்கு தொடங்கும்
இந்தியா அரையிறுதி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றால்
அது துபாயில் உள்ள துபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும்

## மதுப் பழக்கத்தால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வினோத் காம்ளி



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் வினோத் காம்ளி உடல்நலக் குறைவு காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மதுப் பழக்கத்தால் அவரது உடல்நிலை தற்போது மிக மோசமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காம்ளியின் சிரமங்கள் குறித்து ஏற்கனவே பல செய்திகள் வெளிவந்துள்ளன. மதுப்பழக்கத்தால், கிரிக்கெட் வட்டாரத்தில் பல நண்பர்களுடன் அவருக்கு மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

காம்ளியின் தற்போதைய உடல்நிலை குறித்தான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது. பயிற்சியாளர் ராமகாந்த் ஆச்ரேக்கரின் நினைவஞ்சலி நிகழ்ச்சியில், சச்சின் டெண்டுல்கர், பிரவீன் ஆம்ரே, பல்விந்தர் சிங் சாந்து மற்றும் சஞ்சய் பங்கார் ஆகியோருடன் மேடையில் கலந்து கொண்ட வினோத் காம்ளி உடல் ரீதியாகப் பலவீனமாகக் காணப்பட்டார். நிகழ்ச்சியின் போது, தனது சிறுவயது நண்பர் டெண்டுல்கரை தழுவிக்கொண்டு நிற்கும் காம்ளியின் வீடியோ மிகவும் வைரலானது. மேலும் இந்த வீடியோ ரசிகர்களிடம் கவலையை ஏற்படுத்தியது.

## Legends League Football Carnival
## தாருஸ்ஸலாம் அணி வெற்றி



ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சந்தைப்படுத்தல் முகாமைத்துவப் பிரிவினால் 18 வயதுக்குட்பட்ட விளையாட்டு வீரர்கள் பங்குபற்றிய லெஜண்ட்ஸ் லீக் உதைப்பந்தாட்ட (Legends League Football Carnival) போட்டித் தொடரில் கொழும்பு தாருஸ்ஸலாம் வித்தியாலயம் வெற்றி பெற்றுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற இந்தப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் தாருஸ்ஸ லாம் வீரர்கள் கொழும்பு ரோயல் கல்லூரியை பெனால்டி உதை மூலம் 3-2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து வெற்றி பெற்றனர்.

மூன்றாவது இடத்தை காலி மஹிந்த வித்தியாலயம் நான்காவது இடத்தை கொழும்பு இசிபத்தன வீரர்களும் பெற்றனர்.

## மாத்தளை இந்து தேசிய கல்லூரி அணி "ரன்தரு" ஹொக்கி சம்பியன்



(எம்.எஸ்.எம். மஸாஹிம்)

இலங்கை பாடசாலை ஹொக்கி சம்மேளனம் 14 வயதிற்குட்பட்ட பாடசாலை ஹொக்கி குழுக்களிடையே நடத்திய ஹொக்கி போட்டியில் 20 கோல்களை (புள்ளிகள்) பெற்று மாத்தளை இந்து தேசிய கல்லூரி அணி “ரன்தரு“ சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டுள்ளது.

இந்த ஹொக்கி சுற்றுப் போட்டி கடந்த 17,18,19,20 ஆம் திகதிகளில் மாத்தளை எட்வட் ஹொக்கி மைதானத்தில் நடைபெற்றது. இலங்கை பாடசாலை ஹொக்கி அணிகளிலிருந்து மெர்ததம் 60 அணிகள் இப்போட்டியில் கலந்து கொண்டிருந்தன.

இப்போட்டியில் இறுதிப் போட்டிக்கு மாத்தளை இந்து தேசிய கல்லூரி, கொழும்பு இசுபத்தன கல்லூரி, கிராந்துரு கோட்டை கல்லூரி, கேகாலை வித்தியாலய அணி, கெகிராவ மத்திய மகா வித்தியாலய அணி, கண்டி பாத்ததும்பர அணி ஆகியன இறுதி பேட்டியில் கலந்து கொண்டன.

முதலாவது இறுதிப் போட்டி மாத்தளை இந்து கல்லூரி அணிக்கும் கொழும்பு இசுபத்தான கல்லூரிக்கிடையில் நடைபெற்ற போது போட்டி 01-01 என்ற சமநிலையில் முடிவு பெற்றது. அதைத் தொடர்ந்து மாத்தளை இந்து கல்லூரி அணிக்கும் கிராந்துரு கோட்டை கல்லூரிக்கும். இடையில் நடைபெற்ற போட்டியில் மாத்தளை இந்து கல்லூரி 04-00 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது. அதைத் தொடர்ந்து மாத்தளை இந்து கல்லூரி மற்றும் கேகாலை வித்தியாலய அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் இந்து கல்லூரி அணி 07-00 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது. மாத்தளை இந்து கல்லூரி மற்றும் கெகிராவ மத்திய மகா வித்தியாலய அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற போட்டியில் மாத்தளை இந்து கல்லூரி அணி 05-00 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது. இறுதியாக மாத்தளை இந்து கல்லூரி அணி கண்டி பாத்ததும்பர அணியோடு மோதியதில் இந்து கல்லூரி அணி 03-00 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றதோடு இப் போட்டியில் ஆகக் கூடுதலான 20 கோல்களை (புள்ளி) பெற்று போட்டித் தொடரில் ரன்தரு சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.





புத்தளம் ஸ்போர்ட்ஸ் அகடமியின் முதலாவது பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் புத்தளம் சாஹிரா ஆரம்ப பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. விளையாட்டு துறை ஆசிரியர் ஏ.ஜே.எம். இனூஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஓய்வு நிலை கல்விப் பணிப்பாளர் இஸட் .ஏ. ஸன்ஹீர் ஆகியோரின் பங்கு பற்றுதலுடன் பரிசில்கள் வழங்கப்பட்டன. (படங்கள் : எம்.யூ.எம்.சனூன்)

## இலங்கை T10 கிரிக்கெட் போட்டியில் கண்டி ஹோட்டல்களுக்கு 120 கோடி







கண்டி பல்லேகல மைதானத்தில் நிறைவடைந்த இலங்கை T10 கிரிக்கெட் போட்டிக்காக கண்டியை சுற்றியுள்ள ஹோட்டல்களுக்கு 100 மில்லியன் ரூபாவும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வீரர்களுக்கு 120 கோடி ரூபாவிற்கும் அதிகமான தொகை செலுத்தப்பட்டுள்ளதாக லங்கா T10 போட்டியின் பணிப்பாளர் சமந்த தொடன்வெல தெரிவித்துள்ளார்.

அதற்கு மேலதிகமாக நிறையப் பழங்கள், ஆயிரக்கணக்கான தண்ணீர் போத்தல்கள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும், இலங்கைக்கு வெளியே செல்லாமல் நாட்டிலுள்ள வர்த்தகத் துறையினருக்குப் பெருமளவு பணம் கிடைத்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஒவ்வொரு அணிக்கும் 12 நாட்களில் சுமார் 30 அறைகள் தேவைப்பட்டன. 6 அணிகளுக்கு 180 அறைகள் வாங்கினோம். நடுவர்கள், போட்டி தொடர் நடுவர்கள் மற்றும் ஒளிபரப்புப் பொறுப்பாளர்களுக்கு 100 அறைகள் தேவைப்பட்டன. அதன்படி கண்டியைச் சுற்றி 280 ஹோட்டல் அறைகளை வாங்க வேண்டியிருந்தது. ஒரு அணியின் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வீரர்களுக்கு சுமார் 7 இலட்சம் அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டுள்ளன” என சமந்த தொடன்வெல தெரிவித்தார்.

இந்தப் போட்டியின் மூலம் 10 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (2900 மில்லியன் இலங்கை ரூபா) வருமானம் இலங்கைக்குக் கிடைத்துள்ளது என்றார்.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினால் 2024 டிசம்பர் 26ம் திகதி வியாழக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.